பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 29 வியாழக்கிழமை 12.04.2018 கதிர் 158

## புதிய அமைச்சரவை வெள்ளிக்கு முன்னர் சத்தியப்பிரமாணம்

கொழும்பு, ஏப்.12
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவின் இறுதித் தீர்மானம் அறிவிக்கப்பட்ட பின்னர் எதிர்வரும் 14ஆம் திகதிக்குள் புதிய அமைச்சரவை சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும் என்று அமைச்

பக்கம் 03

### இனி அது ரகசியம் அல்ல!

எம்.ஜி.ஆரும் சிவாஜியும் ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்த நடிகர்கள். அது போலத் தான் ரஜினியும் கமலும். அண்மைக் காலத்தில் தல, தளபதியும் அப்படித்தான்.

இதில் வேடிக்கை என்ன வென்றால் ஏட்டிக்குப் போட்டியான இந்த நடிகர்கள், தாங்

பக்கம் 03

# வடக்கு ஆக்கிரமிப்பு தெற்கிலே நடந்தால் ஏற்றுக்கொள்வீர்களா?

## தென்னிலங்கை ஊடகவியலாளரிடம் அமைச்சர் ராஜித ஆவேசக் கேள்வி



கொழும்பு, ஏப்ரல் 12
"வடக்கில் மக்களிடம் இருந்து இராணுவம் சுவீகரித்துவைத்துள்ளகாணிகள்உடனடியாக விடுவிக்கப்படவேண்டும். தெற்கு மக்களின் காணிகளை இராணுவம் அபகரித்தால் அவர்கள் வெறுமனே சும்மா இருப்பார்களா? மக்களின் காணிகளில் இராணுவத்தினர் பேக்கரி அமைத்து வியாபாரம்செய்வது சரியா?"

- இவ்வாறு ஆவேசமாகக் கேள்வி எழுப்பினார் அமைச்சரவைப் இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன.

பக்கம் 03

## மக்கள் காங்கிரஸ் முசலியில் ஆட்சி



மன்னார், ஏப்.12
மன்னார் முசலிப் பிரதேச சபையை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில

பக்கம் 03

## மே முதலாம் திகதி விடுமுறை இரத்து

கொழும்பு, ஏப்.12
உலகத் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மே மாதம் முதலாம் திகதி அரசால் நிர்ணயிக்கப்பட்ட அரச விடுமுறை இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் இம்முறை மே 7ஆம் திகதி உலகத் தொழிலாளர் தினம் கடைப்பிடிக் கப்படவுள்ளதால் இந்த மாற்றம்

பக்கம் 03


## புலிகளின் ஆயுதங்கள் தேடித் தீவிர வேட்டை



கிளிநொச்சி, ஏப்.12
விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் புதைக்கப்பட்டுள்ளன என்ற சந்தேகத்தின்

பக்கம் 03

## நானாட்டானில் கூட்டமைப்பு திருவுளச்சீட்டு மூலம் வெற்றி



மன்னார், ஏப்.12
மன்னார் – நானாட்டான் பிரதேச சபையை கடும் போட்டிக்கு மத்தியில் திருவுளச்சீட்டின் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

பக்கம் 18

## விமான விபத்து: அல்ஜீரியாவில் 257 பேர் பலி!

அல்ஜியர்ஸ், ஏப்.12
அல்ஜீரியாவில் ராணுவ விமானம் மோதியதில் குறைந்தது 257 பேர் இறந்துள்ளனர் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்

பக்கம் 03

# கூட்டு அரசைத் தொடர ஜனாதிபதி தீர்மானம்

## சு.க. மத்திய குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

கொழும்பு,. ஏப்.12
கூட்டுஅரசைத்தொடர்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முடிவெடுத்துள்ளார் என நம்பகரமாகத் தெரியவருகின்றது. இதன் அடிப்படையிலேயே அவர் நேற்று நடைபெறவிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தை அதிரடியாக ஒத்திவைத்தார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

பக்கம் 18

## 2 மீனவர்களை படகுடன் காணவில்லை

யாழ்ப்பாணம், ஏப்.12
காரைநகரிலிருந்து ட்றோலர் படகில் கடந்த 9 ஆம் திகதி திங்கட்கிழமை கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்கள் இருவரைக் காணவில்லைஎன யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் படகு உரி

பக்கம் 04

# கட்சி பேதங்களைக் கைவிட்டு சகலருமே ஒன்றிணைவோம்

## கொள்கை விளக்க உரையில் யாழ். மாநகர முதல்வர் அழைப்பு



யாழ்ப்பாணம், ஏப்.12
கட்சி பேதங்களுக்கு அப்பால், எமது மக்களின் நலன்களுக்காக உழைப்பவர்களாக நாம் அனைவரும் இன்று முதல் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் எனப் பொதுவான அழைப்பை விடுத்து நிற்கின்றேன்.

- இவ்வாறு

பக்கம் 04

## பிரபாவுக்கு சிலை வைக்க ஈ.பி.டி.பி. ஆதரவளிக்கும்!

### மாநகர சபை உறுப்பினர் குகேந்திரன் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஏப்.12
யாழ்ப்பாணத்தில் நாம் யாருக்குச் சிலை அமைப்பதென்றாலும் பக்கபலமாக இருப்போம். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் சிலை அமைப்பது என்றால் கூட நாம் எதிர்க்க மாட்டோம் எனத் தெரிவித்த ஈபிடிபியின் யாழ்.

பக்கம் 18

## தியாகி திலீபனுக்குச் சிலை கிட்டு பூங்கா புனரமைப்பு

### மாநகர சபைக் கூட்டத்தில் மணிவண்ணன் வலியுறுத்தல்

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஏப்.12
தியாக தீபம் திலீபனுக்கு யாழ். மாநகரசபை சிலைவைத்தால்அதனை வரவேற்பதோடு அதற்கான ஒத்துழைப்பும் வழங்குவோம். அதே போன்று மாவீரர்களின்

பக்கம் 18

## மோசடி விசாரணைக்கு முகம்கொடுக்கத் தயார்

### யாழ். மாநகர முன்னாள் முதல்வர் நேற்று அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஏப்.12
யாழ். மாநகர சபையின் கடந்த ஆட்சிக் காலங்களில் ஊழல் மோசடிகள் இடம் பெற்றன எனத் தேர்தல் காலங்களில் அரசியல் உள்நோக்கத்துக்காகவே கூறப்பட்டு வந்தது. அவ்வாறான ஊழல் மோசடி

பக்கம் 03

## யாழ்ப்பாணத்துக்கு மாவா வழங்குபவர் புத்தளத்தில்!

### நீதிமன்றுக்குப் பொலிஸார் அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப் .12
யாழ்ப்பாணம் இந்துச் சந்திப்பகுதியில் இயங்கிய மாவா போதைப்பொருள் விற்பனை நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட 7 பேரையும் எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கு

பக்கம் 18

# சிங்கள குடியேற்றத் திட்டங்கள் தொடர்பில் வட மாகாண சபையால் விரிவான அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 12

தமிழர்களின் தாயகப்பிரதேசத்திற்கு உட்பட்ட வடமாகாணத்தைக் கொக்கிளாய் ஊடாக இரண்டாகப்பிளவுபடுத்துமுன்னெடுக்கப்படும் சிங்களக் குடியேற்றத்திட்டம் தொடர்பில் விரிவான அறிக்கை ஒன்றைச்சமர்ப்பிக்கப் போவதாக வட மாகாண சபை அறிவித்துள்ளது.



முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி எல் வலையம் என்ற பெயரில் மாயபுர சிங்களக் குடியேற்றத்திட்டத்தை இராணுவத்தினரின் ஆதரவுடன் அரசு முன்னெடுத்துவருகிறது என வட மாகாண சபை உறுப்பினர் ரவிகரன்எச்சரித்திருந்ததை அடுத்தே வட மாகாண சபை உறுப்பினர்கள்நேற்றுமுன்தினம்நேரடியாக அந்தப் பகுதிகளுக்கு நேரில் சென்று நிலமைகளை ஆராய்ந்துள்ளனர்.

இதன்போது வட மாகாண சபையின் ஆயுட்காலம் முடிவடைவதற்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் வட மாகாண சபை உறுப்பினர்கள் தமது பகுதிகளுக்கு விஜயம்செய்தமை குறித்து பிரதேச மக்கள் வருத்தம் வெளியிட்டுள்ளனர்.

முல்லைத்தீவுக்கு விஜயம் செய்த வட மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே சிவாஞானம் தலைமையிலான உறுப் பினர்கள் நேற்று முன்தினம் கோட்டை கேணிப் பகுதிக்கு சென்று அங்குள்ளபழைமைவாய்ந்தபிள்ளையார் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டுவிட்டு பிரதேச மக்களிடம் குறைகளைக் கேட்க முற்பட்டனர்.

இதன்போது கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் கருத்து தெரிவிக்கையில் –

வடமாகாணத்தில்முதல் இடம் பெயர்ந்த கிராமமாகவும் பாதிக்கப்பட்ட கிராமமாகவும் வரலாற்றில் இடம்பிடித்துள்ள கொக்குத்தொடுவாய் கிராமத்தைச் சேர்ந்த தாம் பெரும் இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகிறோம் எனச் சுட்டிக்காட்டினார்.

வடமாகாணசபையின் ஆயுட்காலம் முடிவடைவதற்கு இன்னும் ஒருசில மாதங்களே உள்ள நிலையில் சிங்கள மயமாக்கலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்வதால் எதனை சாதிக்க முடியும் என்றும் மக்கள் தரப்பில் கேள்வி எழுப்பப் பட்டது.

இந்த நிலையில் மக்களுடன் கலந்துரையாடிய வட மாகாண சபை உறுப்பினர்கள் இறுதியில் தமது நிலைப் பாட்டைத் தெளிவு படுத்தினர்.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் மகாவலி அபிவிருத்தி அமைச்சினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை உடனடியாக நிறுத்துமாறு அவரை நேரில் சந்தித்தபோது கோரிக்கை விடுத்துள்ளோம் எனத்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடன் கடந்தவாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் இடம் பெற்ற சந்திப்பின் போது இந்தக் கோரிக்கையை விடுத்தோம் என மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் காணிப்பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக வடமாகாண சபை உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் அங்கு விஜயம் செய்திருந்தனர்.

இந்த நிலையில், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் நாடா ளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் ஆகியோரும் அங்கு விஜயம் செய்துள்ளனர்.

இவர்கள் கேப்பாபுலவில் 408 ஆவது நாளாகத் தொடர்ச்சியாக நில மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களைச் சந்திந்து அவர்களின் காணி விடுவிப்பு தொடர்பில் கேட்டறிந்துள்ளதுடன் பிலக்குடியிருப்பிற்கு சென்று அங்கு விடுவிக்கப்பட்ட பகுதிகளில்தேசிய வீடமைப்பு அதிகார சபையினரால் மக்களுக்கு கட்டிக் கொடுக்கப்படும் வீடுகளையும் பார்வையிட்டுள்ளனர்.

## எஸ்.பியின் வீட்டில் இரகசிய கூட்டம்!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் இரவு பத்தரமுல்லையில் உள்ள அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவின் வீட்டில் இரகசியக் கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு நீண்ட நேரமாக இந்த ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு அளித்த, சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் உள்ளிட்ட 16 நாடாளுமன்ற உறுப்பினர்களே இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இவர்கள், கூட்டு அரசில் இருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி விலக வேண்டும் என்று கோரி வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை நடந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இவர்கள் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியிருந்தனர். அதற்கு மற்றொரு தரப்பினர் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

இதனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒன்றுபட்ட முடிவை எடுக்கும் நோக்கில் நேற்று மத்திய குழுக் கூட்டத்தை மீண்டும் கூட்டி முடிவெடுக்கப் படும் என அறிவித்திருந் தார்.

இந்த நிலையிலேயே, அரசில் இருந்து விலக வேண்டும் என்று வலியுறுத்தும் ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியினர் நேற்றுமுன்தினம் இரவு நீண்ட நேரம் இரகசிய ஆலோசனை நடத்தியுள்ளனர். இதில் எடுக்கப் பட்ட முடிவுகள் தொடர்பான எந்த தகவலும் வெளியாகவில்லை.

## கிளிநொச்சி கணினி வள நிலையத்திற்கு சீல்; வலயக் கல்விப் பணிப்பாளர் அதிரடி நடவடிக்கை!

முல்லைத்தீவு, ஏப். 12

கிளிநொச்சி மத்திய கல்லூரி வளாகத்தில் இயங்கி வருகின்ற வலயக் கல்வித்திணைக்களத் திற்குரிய கணினி வள நிலையத் திற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் கடந்த வாரம் அதிரடியாக சீல் வைத்துள்ளார்.

இரவு நேரங்களில் லயன்ஸ் கழகத்தின் கூட்டங்களுக்கும், தேவைகளுக்கும் மற்றும் தனிப்பட்ட தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வந்தமையினால் வலயக் கல்விப்பணிப்பாளரால் அது சீல்வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கணினி வள நிலையம் தற்போது முழுமையான செயற்பாடுகள் இல்லாதிருக்கின்ற நிலையில் மாதாந்தம் மின்சாரக் கட்டணம் மற்றும் இணைய இணைப்பு (டொங்குள்) கட்டணம் ஆகிய வற்றை வலயக் கல்வித் திணைக் களமே செலுத்தி வருகிறது.

இந்தநிலையில்இந்தக்கணினி வளநிலையத்தைஅதற்குப்பொறுப்பான லயன்ஸ் கழக உறுப்பினராகவுள்ள ஆசிரியர் ஒருவர் லயன்ஸ் கழகத்தின் கூட்டங்களுக்கு மாலை மற்றும் இரவு நேரங்களில் பயன் படுத்தி வந்துள்ளார்.

எனவே, இது தொடர்பில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயினரஸின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதனைத் தொடர்ந்து அவர் கடந்த வாரம் இந்தக் கணினி வள நிலையத்திற்கு சீல் வைத்துள்ளார்.

அத்தோடு இணைந்து கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இயங்கி வருகின்ற அக்கராயன் ஆசிரிய வள மத்திய நிலையமும் மூடப் பட்டு இரண்டு நாள்களின் பின்னர் திறக்கப்பட்டது. ஆனால் தொடர்ந்தும் கணினி வள மத்திய நிலையம் சீல் வைக்கப்பட்டே உள்ளது.

(க-70)

## சோளக் கடை விஷமிகளால் தீக்கிரை

தனது வாழ்வாதாரத்திற்காக வீதியோரத்தில் சோளம் அவித்து விற்பனை செய்து வந்த ஏழை ஒருவரின் கொட்டில் ஒன்று விஷமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சி புதுமுறிப்பு பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் வீதியோரம் சிறிய கொட்டில் ஒன்றை அமைத்து ஒரு மேசை, கதிரை மற்றும் சில உபகரணங்களை வைத்து நாளாந்தம் சோளம் அவித்து விற்பனை செய்து வரும் சின்னவன் என்பவரின் கடையே விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது. கடை முற்றாக எரிந்து அழிந்துள்ளது. அதிலிருந்த அவரது சிறியளவிலான முதலீடும் சாம்பலாகி விட்டது.

ஐந்து பிள்ளைகளின் தந்தை யான இவர்நாளாந்தம் சோளம் விற்பனை செய்து கிடைக்கின்ற வருமானத்திலேயே தனது பிள்ளைகளின் கல்விச் செலவு மற்றும் குடும்பச் செலவுகளைக் கவனித்து வந்துள்ளார்.

தற்போது இவரின் கடை எரிக்கப்பட்டுள்ளமையினால் வீதியோரத்தில் மரத்தின் கீழ் சோளம் அவித்து விற்பனை செய்து வருகின்றார். மிக வறிய நிலையில் உள்ளமையால் இவரால் மீண்டும் தனது கடையை அமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## பதில் முதல்வராக சர்வேஸ் பதவியேற்பு



கொழும்பு, ஏப். 12

வடக்கு மாகாண பதில் முதலமைச்சராக மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் நேற்றுப் பொறுப்பேற்றார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் ஆன்மிகச்சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் தமிழகம் பயணமானார்.

அவர் இரண்டு வாரங்களுக்கு அங்கு தங்கியிருப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் வடக்கு மாகாண பதில் முதலமைச்சராக மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் நேற்று பதவி யேற்றார்.

பத்திரமுல்லவில் உள்ள வடக்கு மாகாண ஆளுநரின் உப அலுவலகத்தில் மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே முன்னிலையில் க.சர்வேஸ்வரன் பதவியேற்றார்.

## மே தினப் பேரணி நடத்துவதில்லை:

### ஐ.தே.க தீர்மானம்!

கொழும்பு, ஏப். 12

ஐக்கிய தேசியக் கட்சி இம்முறை மேதினப் பேரணி எதனையும் நடத்துவதில்லை என தீர்மானித்துள்ளது.

மே தினக் கூட்டமொன்றை மட்டும் நடத்துவதெனவும், பேரணிகளை நடத்துவதில்லை எனவும் கட்சி தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டம் சுகததாச உள்ளக அரங்கில் நடைபெறவுள்ளது.

அண்மையில் அலரிமாளிகையில் நடைபெற்ற கட்சி மறுசீரமைப்பு குறித்த கூட்டத்தின்போது இந்த விடயம் பற்றித் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கேகாலையில் மே தினக் கூட்டங்களை நடத்த வேண்டுமென முன்னதாக யோசனை முன்வைக்கப் பட்டிருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இம்முறை மே தினம் 7 ஆம் திகதி அனுஷ்டிக்கப் படவிருப்பதனால், மே தினக் கூட்டமொன்றை மட் டும் கொழும்பில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இனி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கள் சந்திக்கும் போது மிக அந்நியோன்னியமாக – அன்புடன் – தமக்குள் பழகிக் கொள்வார்கள். ஆனால், பாவம் ரசிகர்கள். இந்த நடிகர்களின் பெயர் சொல்லி தங்களுக்குள் மோதிக் கொள்வார்கள்.

இப்போது நமது அரசியல்வாதிகள் விடயத்திலும் அதுதான் நடக்கின்றது. இங்கு நாம் இரண்டு அரசியல்வாதிகள் ஏட்டிக்குப் போட்டியாக அறிக்கை மோதல், செவ்விச் சண்டை, பேட்டிப் போர் என்று ஊடகங்களில் துவந்த யுத்தம் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்று பார்த்தால் அவர்கள் தங்களுக்குள் அன்புருக குசலம் விசாரித்து நட்புரிமை பாராட்டிக் கொண்டு பழகின்றார்கள்.

அத்தகைய சந்திப்பு ஒன்று நேற்றுக் காலை நடந்தது.

சந்தித்தவர்களில் ஒருவர் மாணவர். மற்றவர் அவரின் குரு. ஆனால் தமிழர் அரசியலில் இன்று அவர்கள்தான் பிரதான வைரிகள்.

ஒருவர் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன். மற்றவர் அவரின் சட்டத்துறை சிஷ்யர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.

இருவரும் நேற்றுக் காலை சந்தித்துக் கொண்டனர் என்றா எழுதினேன்? விக்னேஸ்வரன் ஏற்கனவே இந்தியாவில். அப்படி என்றால் சுமந்திரனும் இந்தியா சென்றுள்ளாரா? இந்தியாவிலா சந்திப்பு நடந்தது? – என்றெல்லாம் நீங்கள் கேட்கின்றமை எனக்குப் புரிகின்றது.

இல்லை. சந்திப்பு நடந்த இடம் கட்டுநாயக்க விமான நிலையம்.

இந்தியா செல்வதற்காக நேற்று முன்தினம் கட்டுநாயக்காவுக்கு முதல்வர் விக்னேஸ்வரன் புறப்பட்டார் என்பது உண்மை. அதை வைத்தே எங்கள் பத்திரிகை உட்பட பல ஊடகங்களும் முதல்வர் இந்தியா சென்றார் என செய்திகளை வெளியிட்டன.

ஆனால், சில தடங்கல்களினால் அவர் நேற்று முன்தினம் இந்தியா செல்ல முடியவில்லை. நேற்றுக் காலையில்தான் அவர் தமிழகம் புறப்பட்டார்.

நேற்று அவர் விமான நிலையத்துக்குச் சென்ற சமயம் அங்கு சுமந்திரன் எம்.பி. நின்றிருந்தார்.

வெளிநாட்டிலிருந்து வருகை தரும் தமது மனைவியை அழைத்துச் செல்வதற்காக அங்கு சுமந்திரன் காத்திருந்தார்.

நேற்று காலை 6.30 மணியளவில் VIP Lounge இல் முதல்வர் விக்னேஸ்வரனைக் கண்ட சுமந்திரன் *''என்ன ஸேர்... நேற்றே இந்தியா போய்விட்டீங்கள் என்று நினைத்தேன். இங்கு நிற்கின்றீர்களே?''* – என்று கேட்டார்.

*''இல்லை. இல்லை... இன்றுதான் போகிறேன்.''* – என்று சிரித்தபடி பதிலளித்தார் விக்னேஸ்வரன்.

*''இன்று தமிழ்ப் பத்திரிகைகள் பாத்தீர்களா? நாங்கள் இரண்டு பேரும்தான் பிரதான செய்திப் பிரமுகர்கள்...? –* என்றார் சுமந்திரன்.

*''ஓமோம்... பார்த்தேன்...''* – என்றார் முதல்வர்.

*''எத்தனை நாள் இந்தியாவில் தங்கியிருப்பீர்கள்?''* என்று கேட்டார் சுமந்திரன்.

*''சுமார் பத்து நாள்கள்''* – என்று பதிலளித்தார் முதல்வர்.

*''உங்கள் பயணம் நன்றாக அமையட்டும்.''* என்று வாழ்த்தி விடை கொடுத்தார் சுமந்திரன்.

*''நான் அவரை வாழ்த்தி அனுப்பி வைத்தேன் – இந்தியாவிலிருந்து சரியான தீர்மானம் எடுத்துக் கொண்டு வாருங்கள் என்று மனதுக்குள் எண்ணியவாறு''* – என்று பின்னர் நண்பர் ஒருவரிடம் உரைத்தார் சுமந்திரன்.

தகவல் அறிந்து சுமந்திரன் எம்.பிக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்தேன்.

*''நாங்கள் இங்கு உங்கள் இருவரினதும் செய்திகளை ஏட்டிக்குப் போட்டியாக பிரசுரித்துச் சிண்டை முடிந்து விட்டுக் கொண்டிருக்கிறோம். உங்கள் மோதலில் செய்திக் குளிர்காய்ந்து கொண்டிருக்கிறோம். நீங்கள் என்னடாவென்டால், ஆளுக்காள் அன்பு பொங்க – பாசம் வழிய – நல்ல உறவுகளாய்ப் பழகிக் கொண்டிருக்கின்றீர்களே...? –* என்று பொய்க் கோபத்துடன் சீண்டினேன் நான்.

*''இல்லை. இல்லை. நாங்கள் இருவரும் தனிப்பட்ட முரண்பாடுகளோ, எதிரித் தன்மைகளோ கொண்டவர்கள் அல்லர். கொள்கை முரண்பாடு, கோட்பாடு முரண்பாடு நீடிக்கும். தனிப்பட்ட நட்பு, மரியாதை, அன்புரிமை அதனால் சிதறி விடாது.''* என்ற சாரப்பட பதிலளித்தார் சுமந்திரன்.

I think they both are agreed to disagree.

**-மின்னல் -**

## மே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) செய்யப்பட்டுள்ளது.

இந்த வருடம் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி வெசாக் பௌர்ணமி என்பதனால் அதனைத் தொடர்ந்து வரும் ஒரு வார காலம் வெசாக் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் மே தினக் கொண்டாட்டங்கள் மே மாதம் 7ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளன. (ஐ)

## மோசடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கள் குறித்து எந்த விசாரணைக்கும் நாம் தயார்.

இவ்வாறு குறிப்பிட்டார் யாழ். மாநகரசபை முன்னாள் முதல்வரும் தற்போதைய உறுப்பினருமான யோகேஸ்வரி பற்குணராசா.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதலாவது அமர்வு நேற்றுச் சபை மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு தனது கன்னி உரையை ஆற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக எந்தவொரு விசாரணைக்கும் நாம் தயாராகவே இருக்கின்றோம். அதற்குப் பூரண ஒத்துழைப்பை வழங்குவேன். வடக்கு மாகாண சபையில் அங்கம் வகித்த அமைச்சர்களுக்கு எதிராகவும் ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அந்த விசாரணையின் பின்னர் அவர்கள் பணி நீக்கமும் செய்யப்பட்டுள்ளனர். எனவே மாநகர சபையின் ஊழல் தொடர்பாக விசாரணை செய்யக் குழு ஒன்றை நியமிக்கவேண்டும். அதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவே இருக்கிறேன் – என்றார்.

இதேவேளை அங்கு உரையாற்றிய ஈ.பி.டி.பியின் உறுப்பினர் சட்டத்தரணி முடியப்பு றெமீடியஸ், சபையின் கடந்த கால ஆட்சியில் ஊழல் விசாரணைகள் மேற்கொள்கின்ற அதேவேளை, அந்த ஆட்சி அமைய முன்னர் இருந்த ஆணையாளர் நிர்வாகத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பிலும் விசாரணை செய்ய வேண்டுமெனக் கோரினார்.

தற்போதைய மாநகர அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் முன்னர் மாநகர ஆணையாளராக இருந்த காலத்தில் நடைபெற்ற ஊழல் மோசடிகள் குறித்தும் விசாரிக்கவேண்டுமென றெமீடியஸ் கோரியபோது அவ்வாறு யாருடைய பெயரையும் குறிப்பிட்டுப் பேசவேண்டாமென முதல்வர் கூறினார். (ஐ–7)

## சிறுவர் சித்திரைக் கொண்டாட்ட களியாட்டத்தின் இறுதிநாள் இன்று

யாழ். மாநகரசபை மைதானத்தில் கடந்த 8 ஆம் திகதி முதல் தொடர்ந்து நடைபெற்று வரும் சிறுவருக்கான சித்திரைக் கொண்டாட்டத்தில் இறுதிநாள் நிகழ்வுகள் இன்றாகும்.

அட்லஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் சித்திரப் போட்டியின் பரிசுகள் பின்புறமாக முடிவுகள் அறிவிப்புடன் இந்தக் கொண்டாட்டம் நிறைவு பெறும்.

நேற்று முன்தினம் மணப்பெண் அலங்கார அணிவகுப்புப் போட்டி நடைபெற்றது. அதில் 30 மணப்பெண்களின் அலங்காரப் போட்டியாயாளர்கள் பங்கு பற்றினர். அவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 பேர் நேற்றைய இறுதிப் போட்டியில் கலந்து கொண்டனர்.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அடிப்படையில் கிளிநொச்சியில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி – அறிவியல் நகரில் யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்துக்குப் பின்புறமாக உள்ள காட்டுப் பகுதியிலேயே இந்த அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ)

## விமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) என. இந்த விபத்து நிகழ்ந்த இடத்தில் 14 அவசர மருத்துவ ஊர்திகள் உள்ளனவாகவும், காயமடைந்தோர் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு வருவதாகவும் உள்ளூர் தொலைக்காட்சி செய்தி அறிக்கைகள் குறிப்பிட்டன.

நேற்றுக் காலையில் தலைநகர் அல்ஜீரஸ்க்கு அருகிலுள்ள பௌபிரிக் ராணுவ விமானப் படைத்தளத்தில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

மேற்கு அல்ஜீரிய நகரான பெச்சார் நகரை நோக்கி இராணுவ துருப்புக்களை ஏற்றிச் சென்ற விமானமொன்றே இவ்வாறு விபத்திற்குள்ளாகியுள்ளது.

கடந்த 2003ஆம் ஆண்டு இடம்பெற்ற எயர் அல்ஜீரியா ஜெட் விமான விபத்தில் 102 பேரின் உயிர் காவு கொள்ளப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற மிக மோசமான விபத்தாக இவ்விபத்து நோக்கப்படுகிறது.

4 ஆண்டுகளுக்கு முன்னால், ராணுவ அதிகாரிகளையும், அவர்களின் குடும்ப உறுப்பினரையும் ஏற்றி சென்ற விமானம் ஒன்று மோதியதில், 77 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சரவை இணைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அமைச்சரவை மறுசீரமைப்பில் புதிய அமைச்சரவையே சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளது. எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி புதிய அமைச்சரவை சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளது.

புதிய அமைச்சரவையாக அனைவரும் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ள போதிலும், அவரவர் வகித்த துறைசார் அமைச்சுகள் பறிக்கப்படா. தர்க்க ரீதியான மாற்றங்களுடன் அமைச்சரவை மறுசீரமைக்கப்படும். 16 பேர் சுயாதீனமாகச் செயற்படவுள்ளனர்.

அந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுப் புதிய அமைச்சரவையில் அனைவரும் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வோம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். எனவே, சு.கவின் மத்திய செயற்குழுவின் தீர்மானம் அறிவிக்கப்பட்ட பின்னர் எதிர்வரும் 14ஆம் திகதிக்குள் புதிய அமைச்சரவை செயற்படும். – என்றார். (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதா? பிரதமருக்கு ஆதரவளிக்கக் கூட்டமைப்பு நிபந்தனை விதித்ததா? – என்று செய்தியாளர் ஒருவர் இதன்போது கேள்வி எழுப்பினார்.

அவ்வாறு எந்த நிபந்தனையையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விதிக்கவில்லை. அவர்கள் 2015ஆம் ஆண்டு முன்வைத்த கோரிக்கைகளைத் தற்போது மீண்டும் முன்வைத்துள்ளார்கள்.

காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். அரசியல் கைதிகள் தொடர்பான வழக்குகள் துரிதப்படுத்தப்படவேண்டும். காணாமற் போனோர் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும் என பனவேகூட்டமைப்பின் பிரச்சினையாகும். அது நீண்ட நாள் பிரச்சினை. அவை உண்மையில் விரைவுபடுத்தப்படவேண்டும். அதற்காக நிபந்தனை விதிக்கப்படவேண்டிய அவசியமில்லை. அது தொடர்பில் பேசவுமில்லை என்று அமைச்சர் ராஜித பதிலளித்தார்.

வடக்கில் 650 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவுள்ளனவா? நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கூட்டமைப்பு எதிர்த்ததால் இது நடைபெறுகின்றதா? – என்று மற்றொரு கேள்வி எழுப்பப்பட்டது.

வடக்கில் 650 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவுள்ளன. ஆனால் அவ்வாறு விடுவிப்பதில் என்ன தவறிருக்கின்றது? அந்த மக்கள் படும் கஷ்டங்களை நீங்கள் நேரில் சென்று பார்த்தால் அவர்களின் அவலம் உங்களுக்குத் தெரியும்.

உங்கள் காணிகளை யாராவது இவ்வாறு பறித்தெடுத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்களுக்கு அப்படி நடந்தால்தான் புரியும். தம்மிடமிருந்து அபகரிக்கப்பட்ட காணிகளை மீளக் கோரும் உரிமை அந்த மக்களுக்கும் இருக்கின்றது – என்றார் அமைச்சர் ராஜித.

எனினும் காணி விடுவிப்பானது நம்பிக்கையில்லாப் பிரேரணை காரணமாக விரைவுபடுத்தப்பட்டுள்ளதா? – என்று அடுத்த கேள்வி தொடுக்கப்பட்டது.

அதற்கு அமைச்சர் ராஜித ஆவேசமாகப் பதிலளித்தார்.

நீங்கள் எப்படி அவ்வாறு கூற முடியும்!! 650 ஏக்கர் காணிளுக்கான நில அளவையை இரண்டு வாரங்களுக்குள் செய்ய முடியுமா? அதுமட்டுமன்றி மக்களின் காணிகளை இராணுவத்தினர் பேக்கரி அமைத்துக் கொண்டிருப்பது நியாயமானதா? தெற்கில் இவ்வாறு நடந்தால் என்ன செய்வீர்கள்? வடக்கு மக்களின் காணிகள் விரைவாக விடுவிக்கப்பட வேண்டும் என்பதை நான் மிகவும் திடமாக வலியுறுத்திக் கூறுகின்றேன்.

அத்துடன் அரசியல் கைதிகளை விடுவியுங்கள். வழக்குப் போடாமல் இருக்கும் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்கவேண்டும். இதனைக் கூறுவதற்கு நான் பயப்படவில்லை. அரசியல் கைதிகளுக்கு தண்டனை வழங்கியிருந்தால் கூட இந்த நேரம் அவர்கள் வெளியில் வந்திருப்பார்கள். 12 ஆயிரம் முன்னாள் புலி உறுப்பினர்களைக் கடந்த அரசு புனர்வாழ்வளித்து விடுதலை செய்தது. அதுவொரு நல்ல செயற்பாடாகும். அதேபோன்று இந்த அரசும் சிலவற்றை செயற்படுத்த வேண்டும். மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று பதிலளித்தார் அமைச்சர் ராஜித. (ஐ)

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இலங்கை மக்கள் காங்கிரஸ் மீண்டும் கைப்பற்றியுள்ளது.

முசலிப் பிரதேச சபைக்கான தவிசாளர் மற்றும் உபதவிசாளர் தெரிவுகள் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் பிரதேச சபை மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நடைபெற்றன.

தவிசாளர், உப தவிசாளர் தெரிவுகள் ஆரம்பமாகி முடியும் வரை முசலிப் பிரதேச சபைக்கு வெளியில் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டிருந்தது. எனினும், பொலிஸாரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் தவிசாளர், உப தவிசாளர் தெரிவுகள் நடைபெற்றன.

அமர்வு ஆரம்பமாகும் நேரத்துக்குள் 16 உறுப்பினர்களில் சுமார் 6 உறுப்பினர்கள் மாத்திரமே சபைக்கு வருகை தந்திருந்தனர். இதனால் சபையை நடத்தமுடியாத நிலை ஏற்பட்டிருந்த நிலையில், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் சுமார் 30 நிமிடங்கள் சபைச் செயற்பாடுகள் ஒத்தி வைக்கப்பட்டிருந்தன.

குறித்த 30 நிமிடங்களுக்குள் ஏனைய 10 உறுப்பினர்களும் சபைக்கு சமுகமளித்திருந்த நிலையில், முசலிப் பிரதேச சபைக்கான தவிசாளர், உப தவிசாளர் தெரிவுகள் இடம்பெற்றன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சேர்ந்த அப்துல் கபூர் கலீபத் சுபியான் 9 வாக்குகளைப் பெற்று முசலிப் பிரதேச சபையின் புதிய தவிசாளராகத் தெரிவானார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஜே.ஈசான் 6 வாக்குகளையும் பெற்றார்.

தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்ட சுபியானுக்கு ஆதரவாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் 7 வாக்குகளுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு வாக்கும், பொதுஜன பெரமுனவின் ஒரு வாக்குமாக மொத்தமாக 9 வாக்குகள் கிடைத்தன.

அதேவேளை, சுபியானை எதிர்த்துப் போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஜே.ஈசானுக்கு அக்கட்சியின் நான்கு வாக்குகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரு வாக்குகளும் கிடைத்தன.

முசலிப் பிரதேச சபையில் ஒரு பிரதிநிதியைக் கொண்டுள்ள நல்லாட்சிக்கான தேசிய முன்னணி வாக்களிப்பின்போது நடுநிலை வகித்தது.

உப தவிசாளராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சேர்ந்த முஹ்சின் றைசுதீன் 9 வாக்குகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு ஆதரவாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 7 வாக்குகளும், பொதுஜன பெரமுனவின் ஒரு வாக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு வாக்கும் கிடைத்தன. நல்லாட்சிக்கான தேசிய முன்னணி நடுநிலை வகித்தது.

இவரை எதிர்த்துப் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் பிலிப் சகாயநாதன் குரூஸுக்கு 6 வாக்குகள் கிடைத்தன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 4 வாக்குகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 2 வாக்குகளும் குரூஸுக்குக் கிடைத்தன.

முசலி பிரதேச சபையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 7 உறுப்பினர்களையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 4 உறுப்பினர்களையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2 உறுப்பினர்களையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஓர் உறுப்பினரையும், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ஓர் உறுப்பினரையும் கொண்டுள்ளன. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சு.கவுக்கு இது போதாத காலம்

**சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் குழப்பம் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்றது போலும். அப்படித்தான் வெளியாகும் செய்திகள் கோடி காட்டுகின்றன.**

**கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அக்கட்சியிலிருந்து 96 பேர் எம்.பிக்களாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்கள்.**

**ஆரம்பத்திலேயே உள்கட்சிக் குழப்பம் தொடங்கிற்று. அக்கட்சியிலிருந்து தெரிவான எம்.பிக்களில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் பதவிகளைப் பெற்றவர்களைத் தவிர, ஏனைய 52 உறுப்பினர்கள் - முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூட்டு எதிரணியாக எதிர்க் கட்சித் தரப்பில் போயிருந்து இயங்கத் தொடங்கினர்.**

**இப்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் சுதந்திரக் கட்சி ஒரு திட்டவட்டமான - தீர்க்கமான - முடிவை எடுக்காதமையால் எஞ்சியிருந்த 44 எம்.பிக்களும் (அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களும்) தங்களுக்குள் பிளவுபட்டுச் செயற்பட்டார்கள். பிரதமருக்கு எதிராக - நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக - வாக்களித்த 16 பேர் எதிர்வரும் 19 ஆம் திகதியுடன் எதிரணிக்குப் போய் அமரப்போகின்றார்கள் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த வேளையில் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சித் தலைவருமான மைத்திரிபால சிறி சேனவின் தலைமையில் அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் கூடிய கட்சியின் மத்திய குழு தீர்க்கமான ஒரு முடிவை எட்டவில்லை எனச் சில தரப்புகள் தெரிவிக்கின்றன.**

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அவரை எதிர்த்து வாக்களித்த 16 எம்.பிக்கள் உட்பட சு.கவினர் அனைவருமே நல்லாட்சி அரசில் நீடிப்பர் என்று தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர கூறியிருக்கின்றார்.**

**ஆனால், இவ்விடயத்தில் கட்சிக்குள் குழப்பம் நீடிப்பதாகவே தெரிகின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்திலும் ஆரம்பத்தில் சுதந்திரக் கட்சி பிரேரணையை ஆதரித்து வாக்களிக்கும் என முடிவுசெய்யப் பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. கடைசி நேரத்தில் சு.வின் எம். பிக்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளமாட்டார்கள் என்றும் கூட அறிவிப்பு வெளியானது.**

**ஆனால், இறுதியில் சு.கவின் 16 எம்.பிக்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து வாக்களிக்க, எஞ்சிய 25 எம்.பிக்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.**

**அதுபோல இப்போதும் நல்லாட்சி அரசில் நீடிப்பதா என்ற விடயத்திலும் கூட, சு.க. தரப்புக்குள் குழப்பங்கள் நீடிக்கின்றன என்றே தெரிகின்றது.**

**சு.கவின் மத்திய குழுக்கூட்டத்தில் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் கட்சியின் முன்னாள் தலைவியும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையிலும்கூட கருத்து முரண்பாடும், உரசலும் இடம்பெற்றன எனத் தெரிகின்றது.**

**"சுதந்திரக் கட்சி தொடர்ந்து நல்லாட்சி அரசில் நீடிக்கவே வேண்டும். 2015 ஜனவரி 8 ஆம் திகதி பொதுமக்கள் தந்த ஆணை அதுதான்." - என்று அங்கு குறிப்பிட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, கொள்கை விவகாரங்களை எப்படி முன்கொண்டு செல்வது என்பது குறித்து சுதந்திரக் கட்சி மத்திய குழு ஒழுங்காகக் கூடி ஆராய்ந்து முடிவெடுப்பதில்லை என்றும் குறை கூறிவிட்டுச் சென்றார்.**

**அதன் பின்னர் அங்கு கருத்து வெளியிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 2015 ஜனவரி 8 ஆம் திகதி மக்கள் வாக்களித்தமை ஓர் இயக்கத்துக்கு அல்ல, ஒரு தலைமைக்கே என்று சுட்டிக்காட்டினார்.**

**"அப்படியில்லை என்றால் அவர்கள் ஐ.தே.கவிலிருந்தே ஒருவரை அன்று நிறுத்தியிருக்க முடியும். ஏன் அவர்கள் அப்படிச் செய்யவில்லை என்பதை அவர்களிடமே கேட்டுப்பாருங்கள்." - என்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.**

**சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழுக்கூட்டங்களுக்கு ஒழுங்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வருவதில்லை என்று குறிப்பிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அதனால் கொள்கை விவகாரங்கள் தொடர்பில் இங்கு இடம்பெறும் கலந்தாலோசனைகளை அவர் அறிந்திருக்கவில்லை என்றும் சொன்னார்.**

**சந்திரிகா குமாரதுங்க மத்திய குழுக் கூட்டத்தில் கூறிச் சென்ற கருத்துக்கு, அதே மத்திய குழுவில் கட்சித் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதிலடி கொடுத்திருக்கின்றமை உட்கட்சி முரண்பாட்டின் உச்சம் என்று அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.**

**சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரை அது முக்கியமான ஒரு கட்டத்தில் - திருப்புமுனையில் - இருப்பதாகத் தோன்றுகின்றது.**

**ஒருபுறம் கூட்டு எதிரணி. சு.கவை அப்படியே கபளீகரம் செய்ய - அதன் தலைமையுடன் சேர்ந்து அப்படியே அதைக் கைப்பற்ற - சந்தர்ப்பம் பார்த்துக் காத்திருக்கின்றது.**

**மறுபுறம், வழமையான பிரதான தேசிய கட்சியான ஐ.தே. கட்சி, ஒருபுறம் 'நல்லாட்சி அரசு' என்று தோளில் கைபோட்டபடி மறுபுறத்தில் அதனை வாரிவிட வாய்ப்புப் பார்த்திருக்கின்றது.**

**இவற்றுக்கு மத்தியில் எஞ்சியிருக்கும் சு.கட்சிக்குள் கட்சிக் குழப்பம் வேறு உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்றது.**

**கட்சி தப்பிப் பிழைப்பது இக்காலகட்டத்தில் கஷ்டமான விடயமே. இந்தச் சோதனைக் காலத்தை எப்படித்தான் அக்கட்சி தாண்டி, தாக்குப் பிடிக்கப் போகின்றதோ...!**

## கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தனது கொள்கை விளக்க உரையில் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகர சபையின் முதலாவது அமர்வு நேற்று மாநகர சபை சபா மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் அமர்வை ஆரம்பித்து வைத்துத் தனது கொள்கை விளக்க உரையை வழங்கினார்.

எமது விடுதலைக்காக உயிர் நீத்த மாவீரர்களினதும் மக்களினதும் ஆத்மாக்களை நினைவில் நிறுத்தியவனாக என்று உரையை ஆரம்பித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழ்த் தேசியத்தின் மீது பற்றுறுதியும் தீராத வேட்கையும் கொண்டவன் நான். அதனை நோக்கிப் பயணிப்பதில் உறுதியாக இருப்பவன்.

தமிழ்த் தேசியத்தை நிலைநிறுத்தும் எமது பாதையும் பயணமும் கடினமானதாக இருப்பினும், அது ஜனநாயக ரீதியாகவும் மக்களின் அங்கீகாரத்துடன் கூடியதாகவும் சர்வதேச அரங்கில் மதிப்பார்ந்ததாகவும் இருக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவன்.

மக்களின் விடிவுக்கான நெடிய போராட்ட வரலாற்றைக் கடந்து சென்றுகொண்டிருக்கின்றோம். அந்தப் போராட்டத்தில் அஹிம்சைசார் மென்வலு முயற்சிகளும் போர்சார் வன்வலு முயற்சிகளும் இடம்பெற்றிருந்தன.

ஆனால், இன்றைய திகதியில் எமது மக்களும் இந்த நாடும் சர்வதேசமும் மென்வலு சார்ந்த ஜனநாயக வழிமுறைகளே சாலச் சிறந்தது என எமக்கு மிகவும் உறுதியாகச் சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள். அதுவே சிறப்பானதும் நிச்சயமானதுமாகும் என்பதே எனதும் நான் சார்ந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் நம்பிக்கையாகும்.

அந்த வகையில், யாழ்ப்பாணம் மாநகரின் முதல்வராக நான் அமர்ந்திருப்பது எமது மக்களுக்கான விடிவு நோக்கிய பயணத்தை மேலும் வலுவூட்டுவதற்காக அன்றி, வேறு நோக்கங்கள் அல்ல என்பதைனை மிகவும் ஆணித்தரமாக இந்த இடத்தில் கூறிவைக்க விரும்புகின்றேன்.

எமது பதவிகளும் எமக்கு வழங்கப்படுகின்ற அதிகாரங்களும் எம்மையும் எமது மக்களையும் எமது மக்களுக்கான விடிவு நோக்கிய பயணத்திலிருந்துதிசைதிருப்புமாகவிருந்தால், அந்தக் கணமே எமது பதவிகளைத் துறக்கவும் எமது அதிகாரங்களைத் தூக்கி எறியவும் நாம் ஒருபோதும் பின்நிற்கப் போவதில்லை என்பதனை இங்கு நான் குறித்துக் கொள்கின்றேன்.

மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஜனநாயகச் சூழலில் எமது மண்ணிலே யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தல் இடம்பெற்று நாம் அனைவரும் யாழ். மாநகரின் மதிப்புக்கும் கௌரவத்துக்கும் உரிய உறுப்பினர்களாகத் தெரிவாகி உள்ளோம்.

தமிழ் பேசும் மக்கள் என்ற பொது அடையாளத்தோடு பல்வேறு கட்சிகளாக – குழுக்களாகப் பிரிந்து நாம் தேர்தல்களை எதிர்கொண்டோம். இப்போது இந்த அவையிலே தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளாக – தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளாக நாம் மக்களால் தெரிவு செய்யப்பட்டு யாழ். மாநகர சபையின் கௌரவ உறுப்பினர்கள் என்ற அடையாளம் சுமந்து வந்திருக்கின்றோம்.

இன்று முதல் கட்சி பேதங்களுக்கு அப்பால், எமது மக்களின் நலன்களுக்காக உழைப்பவர்களாக நாம் அனைவரும் ஒன்றிணைந்துசெயற்படவேண்டும் எனப் பொதுவான அழைப்பை விடுத்து நிற்கின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக நாம், சுத்தமான பசுமை மாநகரம் என்ற கருப்பொருளுடன் கூடிய பிரதானமான 7 விடயங்களையும், 31 துணை விடயங்களையும் உள்ளடக்கிய தேர்தல் அறிக்கையை முன்வைத்து எமக்கு வாக்களியுங்கள் என்று மக்களிடம் கோரினோம். 27 வட்டாரங்களுள் 14 வட்டாரங்களைப் பெரும்பான்மையாக வெற்றிகொள்ள எம் மீது நம்பிக்கை வைத்து மக்கள் வாக்களித்திருந்தார்கள். ஏனைய 13 வட்டாரங்களின் மக்களும் எமக்கு வாக்களித்திருந்த போதிலும் சொற்ப வாக்குகளால் அவற்றிலிருந்து எமது உறுப்பினர்கள் தெரிவாகவில்லை.

எமக்கு வாக்களித்தவர்ளையும் ஏனைய கட்சிகளுக்கு வாக்களித்தவர்களையும் யாழ்ப்பாண மாநகர மக்கள் என்றே நாம் நோக்குவோம். யாழ்ப்பாண மாநகரின் முக்கியத்துவம் எத்தகையது என்பது எம் எல்லோருக்கும் தெரிந்ததே. மாவட்டத்தின் தலைநகராக – மாகாணத்தின் தலைநகராக – வரலாற்றின் தலைநகராக – தமிழ்மொழியின் தலைநகராக அது பல்தன்மை கொண்டது.

இலங்கை மக்களாலும் உலக மக்களாலும் மிகவும் நேசிக்கப்படுவது. யாழ். மாநகரத்தை நாம் பார்க்கும் போது, அது இன்னும் பன்மடங்கு முன்னேற்றமடையவேண்டும் என்ற செய்தியைச் சொல்லிக்கொண்டிருக்கின்றது. அந்த முன்னேற்றம் இருக்கும் உள்கட்டமைப்புக்களில் ஏற்படும் முன்னேற்றமாக மாத்திரம் இருக்க முடியாது. மாறாக இந்தப் பிரதேச மக்களும் அவர்களது வாழ்வாதாரமும் வாழ்க்கைத் தரமும் பிரதேசத்தின் சுற்றுச் சூழல் – மாநகரால் பயனு வோரை மையப்படுத்தியதாக ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

யாழ்ப்பாண மாநகரின் முதல்வராகப் பதவியேற்ற நாள் முதல், நான் ஒரு மாணவனாக பல்வேறு விடயங்களைக் கற்றுக்கொண்டு வருகின்றேன். நிர்வாக நடைமுறைகள், துறைகளின் செயற்பாடுகள், மக்களின் தேவைகளும் எதிர்பார்ப்புக்களும், கழிவகற்றல் முகாமைத்துவம், எமது அதிகார எல்லையிலுள்ள வர்த்தகர்கள், ஊழியர்கள், அதிகாரிகள், நிதி சார்ந்தவைகள் எனப் பல் வேறு விடயங்களை நான் கற்றறிந்து கொண்டேன்.

முகாமைத்துவம் சார்ந்து எனக்கு இருக்கும் அறிவைக் கொண்டு இவற்றை எமது வாய்ப்புக்களாக, வளங்களாக, சவால்களாக, பிரச்சினைகளாக அடையாளம் கண்டு அவற்றைச் சிறப்பாகக் கையாளத்தக்க பொறிமுறை விரைவில் அமைக்கப்படும்.

எமது முதலாவதும் முதன்மையானதும் பணியாக மக்களின் தேவைகளை அறிந்து கொள்ளல் எனும் விடயம் அமையவிருக்கின்றது. எமது 27 வட்டாரங்களுக்குமான உறுப்பினர்கள், பட்டியல் மூலம் தெரிவாகிஉள்ளஉறுப்பினர்கள் நிலையியற் குழுக்கள், அதிகாரிகள், ஊழியர்கள், நான் நியமிக்க இருக்கும் இணைப்பாளர்கள், ஆலோசகர்கள், இந்தப் பிரதேச இளையோர்கள், கற்றறிந்தவர்கள் மற்றும் மதப் பெரியார்களின் துணையோடு எமது மாநகரில் நிலவும் தேவைகளையும் குறைபாடுகளையும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய விடயங்களையும் ஒழுங்கமைத்து அதற்கேற்றால்போல் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதே எனது திட்டமாகும்.

அதற்காக உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்புக்களை வேண்டி நிற்கின்றேன்.

கடந்த காலங்களில் பல்வேறு நிர்வாக முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாகப் பலரும் முறைப்பாடுகளை முன்வைத்து வந்துள்ளார்கள். அவை உரிய முறையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். வடக்கு மாகாணஉள்ளூராட்சிஅமைச்சு இது விடயத்தில் முன்னெடுக்கும் அனைத்து விதமான நடவடிக்கைகள் மற்றும் விசாரணைகளுக்கு இந்த அவை முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என கூறிக் கொள்கின்றேன். – என்றார்.

முன்னதாக, யாழ்ப்பாண மாநகர சபையின் முதலாவது அமர்வு நேற்று காலை 9.30 மணிக்கு முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் ஆரம்பமானது.

முதல்வர் உள்ளிட்ட உறுப்பினர்கள் அனைவரும் மங்கள வாத்திய இசையுடன் சபைக்கு அழைத்துவரப் பட்டனர்.

யாழ்.மாநகர ஆணையாளர் த. ஜெயசீலன், யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட்டுக்கு மலர் மாலை அணிவித்து வரவேற்பளித்தார். தமது வாழ்த்துக்களையும் அவர் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபை உத்தியோகத்தர்கள், அனைத்து உறுப்பினர்களுக்கும் மலர் அணிவித்துக் கௌரவித்தனர். தொடர்ந்து சபை யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் ஆரம்பமாகியது.

முதலில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு, மாநகர கீதம் இசைக்கப்பட்டு, முதலாவது சபை அமர்வு ஆரம்பமாகியது. (ஐ)

## 2 மீனவர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாவாந்துறையைச் சேர்ந்த தம்பி மற்றும் முல்லைத்தீவுவைச் சேர்ந்த பவுண் என்ற இருவருமே மீண்டும் வீடு வரவில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ட்றோலர் படகில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு காரைநகர் கடற்கரையில் இருந்து இருவரும் கடற்றொழிலுக்குச் சென்றனர். படகின் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதால் நயினா தீவுக் கடல் பகுதியில் தரித்து நிற்பதாக அறிவித்தனர். நாங்கள் சென்று பார்த்தோம். அவர்களை அங்கு காணவில்லை என்றும் முறைப்பாட்டில் குருநகரைச் சேரந்த படகு உரிமையாளர் கூறியுள்ளார். (ஐ)

### நாளை

13.04.2018
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : பூரட்டாதி பி.ப. 3.36 வரை
திதி : துவாதசி காலை. 8.06 வரை
சுபநேரம் : 6.06 – 7.36 வரை
இராகுகாலம் : 10.36 – 12.06 வரை

# கூட்டமைப்பின் கோரிக்கையை பிரதமர் நிறைவேற்ற முற்பட்டால் அவருக்கு எதிராக போராட்டங்கள் வெடிக்கும் நிலை வரும்



## கோட்டாபயவின் வெளிச்சம் அமைப்பு எச்சரிக்கை

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர் என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் கோரிக்கைகளை நிறைவேற்ற பிரதமர் முற்படுவாரானால் அவருக்கு எதிராக பெரும் போராட்டங்கள் வெடிக்கும் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் வெளிச்சம் அமைப்பினர் எச்சரித்துள்ளனர்.

சிங்களத்தில் எளிய என்று அழைக்கப்படும் வெளிச்சம் அமைப்பு நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அந்த அமைப்பின் முக்கியஸ்தரான பேராசிரியர் வண.மெதகொடஅபயதிஸ்ஸ தேரர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள கோரிக்கைகள் அனைத்தும் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டவை என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர் மீது எஞ்சியிருந்த ஒருசில நம்பிக்கையையும் இழந்திருக்கிறோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பதற்கு ஆதரவாக வாக்களித்த காரணத்தை அம்பலப் படுத்தியிருந்தார்.

அதற்கமைய அவர்கள் முன்வைத்த பத்து காரணிகளை பிரதமர் ஏற்றுக் கொண்டமையாலேயே அவருக்கு ஆதரவாக கூட்டமைப்பினர் வாக்களித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் பிரதமருக்கு முன்மொழியப்பட்ட பத்து காரணிகளும் தமிழ் இனவாதத்தை அப்பட்டமாக பறைசாற்றுவனவாகவே அமைந்துள்ளன.

இந்த இனவாத சிந்தனைகளை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இந்த இனவாத கோரிக்கைகளை நிறைவேற்ற பிரதமர் முற்படுவாரானால் அவருக்கு எதிராக அனைத்து தேசியவாத அமைப்புக்களையும் இணைத்து வீதியில் இறங்கி போராடவும் நாம் தயாராக இருக்கிறோம் என்றும் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் எச்சரித்துள்ளார்.

## அன்னை பூபதியின் 30 ஆம் ஆண்டு நினைவு!



தேசத்தின் விடுதலைக்காக உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த அன்னை பூபதியின் 30 வருடநினைவுதினத்தை முன்னிட்டு அடையாள உணவு தவிர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த அடையாள உணவுதவிர்ப்பு போராட்டம் எதிர் வரும் 19 ஆம் திகதி நாவலடியில் அமைந்துள்ள அன்னை பூபதியின் நினைவு தூபிக்கு அருகில் இடம்பெறவுள்ளதுடன் உதைப்பந்தாட்ட போட்டியும் இடம்பெறவுள்ளதா தேசத்தின் வேர்கள் அமைப்பின் தலைவர் க. பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

அன்னை பூபதியின் 30 வருட நினைவுதினம் தொடர்பில் தெளிவு படுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கல்லடியில் இடம் பெற்ற போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

## லசந்த விக்ரமதுங்க கொலை தொடர்பில் பொன்சேகாவை கைது செய்ய வேண்டும்!

கொழும்பு, ஏப். 12

'த சண்டே லீடர்' பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கொலை தொடர்பில், அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை கைது செய்ய வேண்டுமென ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

லசந்த கொலை தொடர்பான உத்தரவு பிறப்பித்த குற்றச்சாட்டில் இராணுவ கட்டளைத் தளபதி அமல் கருணாசேகர கைது செய்யப் பட்டுள்ளார்.

அவ்வாறு எனில் அதே குற்றச்சாட்டின் அடிப்படையில் சரத் பொன்சேகாவையும் கைது செய்ய வேண்டும்.



ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவிப்பு

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்பில் சரத் பொன்சேகா பொறுப்புச் சொல்ல வேண்டுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே குற்றம் சுமத்தியிருந்தார்.

நாடாளுமன்றின் ஹன்சார்ட் அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

லசந்த கொலைக்கு உத்தர விட்ட குற்றச்சாட்டில் சரத் பொன்சேகாவை கைது செய்ய வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, படைவீரர்களை இந்த அரசாங்கம் வேட்டையாடி வருகின்றது என முன்னாள் இராணுவ உயர் அதிகாரி மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண தெரிவித்துள்ளார்.

## உயர் கல்வியை தனியார் மயப்படுத்த அரசு முயற்சி!

கொழும்பு, ஏப். 12

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் தொடர்பிலான புதிய சட்டத்தின் மூலம் உயர் கல்வியை தனியார் மயப்படுத்துவதற்கு அரசு முயற்சி செய்கிறது என அரச வைத்திய பீட மாணவர்களின் பெற்றோர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த சட்டமூலத்தின் மூலம் அனைத்து பல்கலைக்கழக கல்விகளும் தனியார் மயப்படுத்தப்படுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுவதாக சங்கத்தின் ஊடக ஒருங்கிணைப்பாளர் வசந்த அல்விஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

## இலங்கையை அதிகம் விரும்பும் பிரித்தானியா, ஜேர்மன் மக்கள்

கொழும்பு, ஏப். 12

இலங்கைக்கு வருகைத் தந்துள்ள சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடம் மார்ச் மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்துள்ளவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 24.1 வீதம் அதிகரித்துள்ளது.

மார்ச் மாதம் நாட்டிற்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 33 ஆயிரத்து 382 ஆகும்.

அதற்கமைய இந்தியாவில் இருந்தே அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ள நிலையில், பிரித்தானியா, ஜேர்மன் ஆகிய நாடுகளின் சுற்றுலா பயணிகளே அடுத்தப்படியாக அதிகமாக இலங்கைக்கு வருகைத் தந்துள்ளனர்.

எப்படியிருப்பினும் சீனாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரியில் இருந்து மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை இலங்கைக்கு 7 லட்சத்து 7924 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ள நிலையில் அது 17.1 வீத அதிகரிப்பதாக கருதப்படுகின்றது.

(க)

## இலங்கையின் சுகாதார சேவை உலகத்தரம் வாய்ந்தது!

இலங்கையின் சுகாதார சேவையானது ஆசிய நாடுகளில் மாத்திரமன்றி உலகளாவிய ரீதியில் தரம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது என உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் டொக்டர் டெட்ரோஸ் அதனொம் ஜெப்ரயேசஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இலவச சுகாதார சேவை தரமானதாக அமைந்துள்ளமையே அதற்குக் காரணமெனக் குறிப்பிட்டுள்ள அவர், இலங்கையின் தலைவர்கள் சுகாதார சேவைக்கு தெளிவான வழிகாட்டல்களை வழங்குகின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற உலக சுகாதார தின வைபவத்தில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையானது குறை வருமான நாடாக இருந்தது. எனினும் தற்போது நடுத்தர வருமான நாடாக மாறியுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் நாட்டின் இலவச சுகாதார சேவையானது தரமானதாக அமைந்துள்ளமையானது வளர்முக நாடுகளுக்கு ஒரு முன்னுதாரணமாக அமைந்துள்ளது என்றும் வலியுறுத்தியுள்ளார்.



உலக சுகாதார ஸ்தாபனம்

காலைக்கதிர்
Kalaikkathir



# வெருகல் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு








மட்டக்களப்பு,ஏப்.12

வெருகல் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை வெருகல் மலைப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

2004ஆம் ஆண்டு சித்திரை மாதம் 10ஆம் திகதி வெருகல் ஆற்றின் ஊடாக தரையிறக்கப்பட்ட விடுதலைப் புலிகளுக்கும்,தமிழ் மக்கள்விடுதலைப் புலிகள் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையிலான மோதலில் 2008 தமிழ் மக்கள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் உயிரிழந்தனர்.

இதனையடுத்து ஆண்டுகள்தோறும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி வெருகல் படுகொலை நினைவு தினத்தை அனுஷ்டித்து வருகின்றது.

இதன்கீழ் நேற்று மாலை வெருகல் மலை மக்கள் பூங்காவில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பிரதி தலைவர் திரவியம் தலைமையில் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கட்சி முக்கியஸ்தர்களினால் நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் உயிரிழந்தவர்களின் உறவினர்களும் நினைவுச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

இந்த நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன், உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள், பொதுமக்கள், கட்சிஆதரவாளர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

## கிண்ணியா நகர சபை ஐ.தே.க. வசமானது



திருகோணமலை - கிண்ணியாவின்நகரசபையின் முதல் அமர்வு கிண்ணியா நகர சபை மண்டபத்தில் நேற்றுக் காலை 9மணிக்குஇடம்பெற்றது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.வை.எம்.சலீம் தலைமையில் நடைபெற்ற இச்சபை அமர்வின்போது பகிரங்க வாக்கெடுப்பின் மூலமாக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் எஸ்.எச்.எம்.நளீம் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வாக்கெடுப்பின்போது தவிசாளருக்கு ஆதரவாக 09 வாக்குகள் அளிக்கப்பட்டன.

பிரதித் தவிசாளர் தெரிவுக்கான பகிரங்க வாக்களிப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஐயூப் நளீப் சப்ரீன் ஒன்பது வாக்குகளை பெற்று பிரதித் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். (ப)

## மட்டு. பொலிஸாருக்கு மாதாந்த பரிசோதனை



மட்டக்களப்பு,ஏப்.12

மட்டக்களப்பு பொலிஸ் தலைமையக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த பரிசோதனைகள் நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றுள்ளன.

இந்தப் பரிசோதனைகள் மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் உதவி அத்தியட்சகர் கே.பி.கீர்த்திரத்ன தலைமையில் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இதன்போது மட்டக்களப்பு பொலிஸ் நிலையப் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த ஆய்வு அறிக்கை பரிசோதனைகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான சீருடை அணிவகுப்புப் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

நடைபெற்ற மாதாந்த ஆய்வு அறிக்கை பரிசோதனை நிகழ்வில் மட்டக்களப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தீகா வதுற மற்றும் மட்டக்களப்பு பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ப)

## பூட்டியிருந்த வீட்டை உடைத்து 21 பவுண் தங்க நகை கொள்ளை

மட்டக்களப்பு, ஏப்.12

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள குமாரபுரம் பிரதேசத்தில் நேற்று முன் தினம் இரவு பூட்டியிருந்த வீட்டை உடைத்து 21பவுண் தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குமாரபுரம் கோவில் வீதியில் உள்ள வீட்டின் உரிமையாளர்கள் கடந்த 9ஆம் திகதி வீட்டைப் பூட்டிவிட்டுக் குடும்ப சகிதமாகக் கண்டிக்குச் சென்று நேற்று முன்தினம் நள்ளிரவு வந்தபோது வீட்டின் மாடியிலுள்ள கதவை உடைத்து அலுமாரியில் இருந்த 21 பவுண் தங்க ஆபரணங்கள் கொள்ளை போயுள்ளதைக் கண்டு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டிற்கமைய சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் தங்களது விசாரணைகளை மேற்கொண்டுள்ளதோடு, கொள்ளையர்களை மடக்கிப் பிடிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## புத்தாண்டில் மக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

சித்திரைப் புத்தாண்டு நெருங்கும் வேளையில் புத்தாண்டுக்கு முன்னரும் புத்தாண்டு வேளையிலும், புத்தாண்டுக்குப் பின்னரும் அது பற்றிய பாதுகாப்பு எச்சரிக்கையுடன் இருக்குமாறு பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர்

இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல பொலிஸ் பிரிவுகளிலும் பொது மக்களுக்கான பாதுகாப்பு முன்னெச்சரிக்கை அறிவுறுத்தல்கள் பொலிஸாரால் வழங்கப்பட்டுள்ளன. பிரசுரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. அப்பிரசுரங்களில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

புத்தாண்டை ஒட்டிய காலப் பகுதிகளில் வீட்டை விட்டுச் செல்வதாயின் வீட்டுக் கதவு, சாளரம் (ஜன்னல்) போன்றவற்றை நன்றாகப்பூட்டிவைத்து விட்டுச் செல்லுங்கள்,

பணம் மற்றும் தங்க ஆபரணங்கள் உள்ளிட்ட பெறுமதி மிக்க உடைமைகளை பாதுகாப்பாகப் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்,

பணக்கொடுக்கல்வாங்கல் செய்யும் நிறுவனங்கள், வர்த்தக வியாபார நிலையங்கள் ஆகியவற்றுக்கு வரும்நபர்கள் தொடர்பாக எந்நேரமும் விழிப்பாக இருங்கள்,

உங்கள் பயண வாகனங்களைப் பாதுகாப்பான இடங்களில் நிறுத்தி வைக்கும்போது கூட பூட்டி வைத்து விட்டுச் செல்லுங்கள்,

ஏதாவது, சம்பவங்கள், சந்தேகத்திற்கிடமான சூழ்நிலைகள், நபர்கள் பற்றித் தெரியவந்தால் தயக்கமின்றி, தாமதமின்றி உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது பொலிஸ் அவசரத் தொலைபேசி இலக்கத்திற்கோ அறிவித்துக் கொள்ளுங்கள்.

மக்களின்பாதுகாப்பிற்காக பொலிஸார் என்றும் உங்களோடு இணைந்திருப்பார்கள். என்றும் அந்த விழிப்புணர்வுப் பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## பொலிஸ் உத்தியோகத்தர் இருவர் பணி நீக்கம்

மட்டக்களப்பு,ஏப்.12

மட்டக்களப்பு, ஏறாவூரில் கொள்ளைச் சம்பவமொன்றில் கைது செய்யப்பட்டு, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் தப்பியோடியதையடுத்து, பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர், உடனடியாக சேவையில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் பெண்ணொருவரின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்ற சந்தேகநபர் ஒருவர், நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டு, பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், அந்த நபர் தப்பியோடியதையடுத்து, தமது கடமையை சரியாகச் செய்யாத குற்றச்சாட்டில், சார்ஜன் ஒருவரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் சேவையில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டனர்.

இதேவேளை, தப்பியோடிய சந்தேகநபர், நேற்று அதிகாலை மீண்டும், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சதுப்பு நிலங்களின் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல்

மட்டக்களப்பு,ஏப்.12

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஈர (சதுப்பு) நிலங்களைப் பாதுகாப்பது தொடர்பான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ம.உதயகுமார் தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற மேற்படி கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஈர நிலங்களைப் பாதுகாப்பதற்கான பல்வேறுபட்ட ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

இது தொடர்பில் மாவட்ட அரச அதிபர் இங்கு கருத்துத் தெரிவிக்கையில் -

சந்துருக்கொண்டான் ஈர நிலம் தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனவும், இவையாவும் ஒருங்கிணைக்கப்பட்டு இப்பகுதியைப் பாதுகாத்து சூழலியல் தொடர்பான உல்லாசச் சுற்றுலாத்துறையைக் கட்டியெழுப்ப இப் பகுதி சமூகமே பொறுப்பேற்று செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்று குறிப்பிட்டார்.

கிழக்குப் பல்கலைக் கழக துணைவேந்தர் கலாநிதி த.ஜெயசிங்கம் இங்கு கருத்து தெரிவிக்கையில் -

இப்பகுதியின் முக்கியத்துவம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான தனது அறிக்கையைச் சமர்ப்பித்ததுடன் இதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டு நேரில் இப்பகுதியைப் பார்வையிட்டுத் தீர்மானங்களை எடுப்பது சிறந்தது என்று தெரிவித்தார். (ப)

# பிரதமருக்கு எதிராக வாக்களித்துவிட்டு அமைச்சுப் பதவி வகிக்க உரிமை இல்லை!

## மனச்சாட்சிக்கு அமைய தீர்மானம் எடுத்துள்ளோம் என்கிறது ரணில் எதிர்ப்பு அணி



பிரதமருக்கு எதிராக வாக்களித்துவிட்டு அமைச்சுப் பதவிகளை வகிக்க எமக்கு உரிமை இல்லை. ஆகவே, எமது மனச்சாட்சிக்கு அமைய தீர்மானம் எடுத்துள்ளோம் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ரணில் எதிர்ப்பு அணியினர் தெரிவித்துள்ளனர்.

அமைச்சுப் பதவிகளைத் துறந்து எதிர்க்கட்சியில் 19 ஆம் திகதி அமரும் எமது தீர்மானத்தில் மாற்றம் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஐக்கிய தேசியக் கட்சி அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ரணில் எதிர்ப்பு அணியினர் தேசிய அரசில் இருந்து வெளியேறும் தீர்மானத்தை எடுத்துள்ளனர் என குறிப்பிடுள்ளனர்.

இது குறித்து இராஜாங்க அமைச்சர் லக் ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தவை வருமாறு:-

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை இதுவரை காலமாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியாக நாம் கூறிய காரணிகள் மற்றும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் அறிக்கைக்கு அமைய சுட்டிக்காட்டப்பட்ட காரணிகளாகும்.

மத்திய வங்கி பிணைமுறி ஊழல் விவகாரத்தில் பிரதமர் பிரதான குற்றவாளி என தெரிந்தும் அந்தக் காரணிகளை நாம் சுட்டிக்காட்டிய பின்னரும் பிரதமருக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்காது செயற்பட முடியாது.

ஆகவே, நாம் ஜனாதிபதியின் அனுமதியுடன் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்கத்தீர்மானம் எடுத்தோம். இதன் பின்னணியில்தான் எமக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் தேசிய அரசில் இருக்கக் கூடாது என்ற அழுத்தங்கள் எழ ஆரம்பித்துள்ளன. எனினும் இவற்றுக்கு முகங்கொடுக்க நாம் தயாராகவே உள்ளோம்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணையை ஆதரித்த பின்னர் எமக்கு அமைச்சுப் பதவிகளை வகிக்கவோ, அல்லது அமைச்சரவையில் அங்கம் வகிக்கவோ தார்மீகம் இல்லை.

ஆகவே, நாம் எமது அமைச்சுப் பதவிகளை துறந்து சுயாதீனமாக செயற்பட தீர்மானம் எடுத்துள்ளோம். எமது நிலைப்பாட்டை நாம் ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தோம். பின்னர் நேற்று கூடிய மத்திய குழுக் கூட்டத்தில் எமது நிலைப்பாட்டினை தெரிவித்தோம்.

எனினும், இறுதித் தீர்மானம் ஒன்று நேற்றைய கூட்டத்தில் பெறப்படவில்லை. எவ்வாறு இருப்பினும் நாம் அமைச்சுப் பதவிகளைத் துறக்கத் தயாராக உள்ளோம். எமது 16 உறுப்பினர்களும் அமைச்சுப் பதவிகளை துறந்து எதிர்வரும் 19 ஆம் திகதி எதிர்க்கட்சியில் அமரத் தீர்மானம் எடுத்துள்ளோம்.

நேற்று முன்தினம் கூடிய மத்திய குழுக் கூட்டத்திலும் நாம் இதே நிலைப்பாட்டில் இருந்தே கருத்துகளை முன் வைத்தோம். இன்றைய (நேற்று முன்தினம்) அமைச்சரவைக் கூட்டத்தைப் புறக்கணிக்க நாம் தீர்மானம் எடுத்தோம். அதற்கமைய எமது அமைச்சரவை அமைச்சர்கள் எவரும் அமைச்சரவை கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

அடுத்த அமைச்சரவைக் கூட்டத்திற்கு முன்னர் எமது நிலைப்பாடுகள் குறித்து ஆராய்வதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். எனினும் எமது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை. எனினும் ஜனாதிபதியை பாதுகாக்கும் கடமை எமக்கு உள்ளது.

அதேபோல், இந்த அரசை பலவீனப்படுத்தவும் நாம் முயற்சிக்கவில்லை. எமது மனச்சாட்சிக்கு அமைய நாம் எதிர் அணியில் அமர்ந்து செயற்படதீர்மானித்துள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## நான்கு தினங்களுக்கு மதுபானசாலைகள் பூட்டு




கொழும்பு, ஏப். 12

புத்தாண்டை முன்னிட்டு நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள மதுபான நிலையங்களை எதிர்வரும் 13 ஆம், 14ஆம் திகதிகளிலும் வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு 29 ஆம், 30 ஆம் திகதிகளிலும் மூடுவதற்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

அந்தவகையில் இந்த மாதத்தில் நான்கு நாள்கள் மதுபானசாலைகளை மூட வேண்டும்என அரசு கட்டாய அறிவித்தலை விடுத்துள்ளது.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 13, 14 ஆம் திகதிகளிலும், அதன் பின்னர் இந்த மாத இறுதியில் வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு 29,30 ஆம்திகதி களிலும் நாட்டில் உள்ள சகல மதுபானசாலைகளையும் மூட அரசு உத்தரவு விடுத்துள்ளது.

மேலும், தமிழ் - சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் நாட்டில் குற்றங்கள் மற்றும் மதுபான விற்பனைக்கு உரிமம் பெற்ற இடங்களில் இடம்பெறும் முறைகேடுகளைத் தடுப்பதற்காக சிறப்புக் கண்காணிப்பு வேலைத்திட்டம் ஒன்றை மதுவரித் திணைக்களம் முன்னெடுக்கவுள்ளது.

முறைகேடாக இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகளை பதிவு செய்ய 0112045077 என்ற தொலைபேசிஇலக்கத்திற்கு அல்லது 0112877882 என்ற தொலைநகல் இலக்கத்திற்கு அறிவிக்குமாறு மதுவரித் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

### அரசிலிருந்து

# 16 பேரையும் வெளியேற்றினால் கூட்டாகவே வெளியேறுவோம்

### என்கிறார் மஹிந்த



கொழும்பு, ஏப். 12

அரசிலுள்ள சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்களும் தாமாக விரும்பி அரசிலிருந்து விலகுவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. அவர்களை யாரும் பலவந்தமாக அரசிலி ருந்து வெளியேற்ற முயற்சித்தால் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நாம் அனைவரும் ஒன்றாகவே அரசிலிருந்து வெளியேறலாமென்று தீர்மானித்துள்ளாம் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளர் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்சந்திப்பிலேயேஅமைச்சர் மஹிந்த அமரவீரஇவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எது எவ்வாறானாலும் கட்சியிலிருந்து எவரையும் நீக்கவோ அல்லது கட்சியை பிரிக்கவோ மத்திய செயற்குழு அனுமதிக்காது. கட்சி என்றதன் அடிப்படையில் நாம் அனைவரும் ஒன்றாக இருந்து செயற்பட வேண்டும் என்பதே ஜனாதிபதியினதும் விருப்பமாகும். எமது கட்சிக்குள் பிளவு வரக்கூடாது என்பதில் ஜனாதிபதியும் உறுதியாக இருக்கின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அரசை நடத்துவதில் எமக்கு ஆட்சேபனை இல்லையென்கின்ற போதி லும் ஐ.தே.கவில் கடந்த காலத்தில் இடம்பெற்ற தவறுகள் மற்றும் குற்றங்களை உணர்ந்து திருத்திக் கொள்ளவேண்டும்.

அவ்வாறு இடம்பெறுமாக இருந்தால் மட்டுமே நாம் ஐ.தே.கவுடன் அரசில் தொடர விரும்புகின்றோம். அவர்கள் தமது தவறுகளையும் குற்றங்களையும்உணரமறுப்பார்களாயின்இணைந்து அரசை நடத்துவது அர்த்தமற்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கைவிடப்பட்ட காரிலிருந்து ஹெரோய்ன் போதைப்பொருள்!

தெற்கு அதிவேக வீதியின் கடுவலை நுழைவாயில் ஊடாக பொலிஸாரின் கட்டளையை மீறிச் சென்ற காரிலிருந்து ஒருதொகை ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்தக் கார் கைவிடப்பட்டிருந்த நிலையில் காணப்பட்டது என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தக் காரினை சோதனையிட்ட பொலிஸார், 56 கிராமும் 100 மில்லிகிராமும் நிறையுடைய ஹெரோய்ன் பொதியை கைப்பற்றியுள்ளனர்.

கார் தற்போது அத்துருகிரிய பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளதோடு, காரின் உரிமையாளரை கண்டறியும் பொருட்டு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## விறகு எடுக்கச் சென்ற பெண் சடலமாக மீட்பு

டயகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டயகம வெஸ்ட் 03 பிரிவு தோட்டத்தில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் தேயிலை மலையில் இருந்து பெண்ணின் சடலம் ஒன்று டயகம பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் வீட்டுத் தேவைக்காக விறகு கொண்டுவரச் சென்ற ஒரு பிள்ளையின் தாயான சுந்தரலிங்கம் மல்லிகா (வயது 58) என இனங்காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக டயகம பிரதேச வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தமைக்கான காரணம் மற்றும் மேலதிக விசாரணைகளை டயகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# முதியோர்களுக்கான ஆன்மிக சுற்றுலா

கிளிநொச்சி, ஏப்.12

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் முதியோர்களுக்கான ஆன்மிக சுற்றுலா ஒன்றை இன்று வியாழக்கிழமை ஏற்பாடு செய்துள்ளது.

இதில் கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த முதியோர்கள் திருக்கேதீஸ்வரம், மடு ஆகிய திருத்தலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர். முதியோர்களது நல்வாழ்வில் அக்கறை கொண்டுள்ள ஒரு நலன்விரும்பி இந்தப் பயணை ஏற்பாட்டை மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் ஊடாக மேற்கொண்டுள்ளார்.

முதியோர்களுக்கு உள சமூக மேம்பாட்டை ஏற்படுத்தும் நோக்குடன் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லும் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அண்மையில் கரைச்சி பிரதேச செயலகம் பிரிவைச் சேர்ந்த ஒரு தொகுதி முதியோர்கள் கன்னியா வெந்நீரூற்று, திருக்கோணேஸ்வரம், லட்சுமிநாராயணர் கோவில் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிப்பு!



கொழும்பு, ஏப். 12

இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் எலபாத்த, எஹெலியகொட, கிரியெல்ல, அயகாம, இரத்தினபுரி, கொலொன்ன ஆகிய பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளிலும் கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கையே தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

அதிக மழையுடனான கால நிலை காரணமாக மண்சரிவு மற்றும் மண்மேடுகள் சரிந்து விழும் சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



ஆன்மிக சொற்பொழிவாளர் இராமுப்பிள்ளை திருநாவுக்கரசுவின் "நாவுக்கினியன்" நூல் வெளியீடு மற்றும் நினைவு கூரல் அண்மையில் இணுவில் அறிவாலயத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர். அந்நிகழ்வில் குருகுல பீடத்தின் சிவஸ்ரீ மகாதேவக் குருக்கள் ஆசியுரை வழங்கியபோது....

# தினசரி ராசி பலன் (12.04.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் பங்குனித்திங்கள் 29 ஆம் நாள் வியாழக்கிழமை ஏகாதசித்திதி. காலை 8.13 மணி வரை. பின்னர் துவாதசி. நட்சத்திரம்: சதயம். பி.இ.3.18 மணி வரை. பின்னர் பூரட்டாதி. மரணயோகம் பி.இ. 3.18 மணி வரை. பின்னர் சுபயோகம்.*

**ராகுகாலம்** *-பகல் 01.43 மணி முதல் 3.15 மணி வரை*

**சுபநேரம்** *- காலை 7.32 மணி முதல் 9.02 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி-** *பங்குனி மாத தேய்பிறை துவாதசி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு-** *சதயம்.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். புது வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். அரசு காரியங்கள் விரைந்து முடியும்.

**ரிஷபம்** விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வியாபாரத் தொழில் நல் அபிவிருத்தியடையும். இழுபறியாக இருந்த காரியங்கள் உடனே முடியும்.

**மிதுனம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். தொட்ட காரியங்கள் துலங்கும். புது வீடு வாகனங்கள் வாங்குவார்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். பூர்வீகச் சொத்துக்கள் வந்து சேரும்.

**கடகம்** சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். உடல் நலம் பாதிப்புறும். உறவினர்கள் தொல்லை தருவார்கள். தொழிலில் வேலைப் பளு அதிகரிக்கும்.

**சிம்மம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் பற்றாக்குறையாக இருக்கும். வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினை ஏற்படும்.

**கன்னி** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். சொந்தபந்தங்களால் ஆதாயம் அடைவார்கள். வியாபாரத்தில் லாபம் உயரும்.

**துலாம்** மகிழ்ச்சியான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். பிரிந்திருந்த சகோதரி தேடி வருவார். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**விருச்சிகம்** சஞ்சலமான நாள். கடினமாக உழைத்தாலும் செலவாகிவிடும் என்ற கவலை உண்டாகும். பணம் பற்றாக்குறையால் கடன் பட நேரும். குடும்பத்தில் குழப்ப நிலை உண்டாகும்.

**தனுசு** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். வியாபாரத்தில் புது முதலீடுகளைத் தவிர்க்கவும். உறவினர் வீட்டுச் சுபச் செலவுகள் உண்டாகும்.

**மகரம்** இனிமையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வெளிநாட்டு உறவினரிடமிருந்து விலை உயர்ந்த பரிசுப் பொருள்கள் வந்து சேரும்.

**கும்பம்** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி மேலோங்கும். வியாபாரம் நன்கு மேன்மை அடையும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவார்கள்.

**மீனம்** அலைச்சல் மிகுந்த நாள். உத்தியோக விஷயமாய் வெளியூர்களுக்கு அலைய வேண்டி வரும். சிலர் அரசாங்க வேலை தேடி அலைவார்கள். பணம் பற்றாக்குறையால் சிலர் கடன் வாங்க அலைவார்கள்.

**சந்திராஷ்டம நாள்: புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# ஆலய உற்சவங்கள்

சண்டிலிப்பாய், ஏப்.12

சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 18 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (இ)

* * * * *

நீர்வேலி, ஏப்.12

நீர்வேலி கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மகோற்சவம் நேற்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 21 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 29 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் 30 ஆம் திகதி இரவு 8 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் மறுநாள் முதலாம் திகதி சண்டேஸ்வரர் உற்சவமும் இடம்பெறவுள்ளன. (இ)

* * * * *

புங்குடுதீவு, ஏப்.12

புங்குடுதீவு கண்ணகை அம்மன் இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பரத் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (இ)

* * * * *

மல்லாகம், ஏப்.12

மல்லாகம் பழபேதி திருமுருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்த ஆலய மகோற்சவம் 15 தினங்கள் நடைபெறவுள்ளதுடன் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (இ)

# ஆலய பொதுக்கூட்டம்

திருநெல்வேலி, ஏப்.12

யாழ். திருநெலல்வேலி கலாசாலை வீதி, பாரதிபுரம் ஸ்ரீகாளி அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய பரிபாலனசபைத் தெரிவும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நகுலா இரவீந்திரராசா, ஜே/144 கிராம அலுவலர் எஸ். சாயிஸ்வரி ஆகியோர் கலந்துகொள்வர். (இ)

# புலோலி சிங்கைநகர் சனசமூக நிலைய 55 ஆவது ஆண்டு விழா

புலோலி, சிங்கைநகர் உதயசூரியன் முன்னேற்ற மன்ற சனசமூக நிலையத்தின் 55 ஆவது ஆண்டு விழா எதிர்வரும் 14 ஆம் திகதி புத்தாண்டு தினத்தன்று பிற்பகல் 3 மணிக்கு நிலைய முன்றிலில் அதன் தலைவர் வி.ஜி. தங்கவேல் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.சரவணபவன் எம்.பியும் சிறப்பு விருந்தினர்களாக மாகாண சபை உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்வர். ஆசியுரையை சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜக் குருக்கள் வழங்குவார்.

மாணவர்கள், ஆசிரியர்கள் இந் நிகழ்வில் கௌரவிக்கப்படுவர். கடந்த 55 வருட காலத்தில் நிலைய வளர்ச்சிக்கு உழைத்து மறைந்த பெரியோர்களை நினைவு கூரும் நிகழ்வும் இடம்பெறும். (இ)

# விளம்பி வருஷப் பிறப்பு செய்யவேண்டிய கருமங்கள்

## வாக்கிய பஞ்சாங்கம்

நாளைமறுதினம் 14/04/2018 சனிக்கிழமை புதிய விளம்பி வருடம் காலை 7.00 மணியளவில் அபரபக்க திரயோதசி திதியில், வணிகக் கரணத்தில், மேடலக்கினத்தில், சிங்க நவாம்சத்தில் சனி காலவோரையில், புதன் சூக்கும வோரையில், தாமத குண வேளையில் நட்சத்திர பக்ஷியாகிய மயில் உண்டித் தொழிலும் சூக்கும பக்ஷி துயில் தொழிலும் செய்யும் காலத்தில் இப்புதிய விளம்பி வருஷம் பிறக்கின்றது.

மருத்து நீர் ஸ்நானம் – இப்புண் ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து ஆலயங்களில் வழங்கப்படும் மருத்து நீர் தேய்த்து சிரசில் கொன்றை இலையும் காலில் ஆலிலையும் வைத்து முறைப்படி ஸ்நானம் செய்தல் வேண்டும்.

**அணிய வேண்டிய ஆடைகள் -**

சிவப்பு நிறமுள்ள பட்டாடையாயினும் சிவப்பு அல்லது கறுப்பு கரையமைந்த புதிய பட்டாடையாயினும் அணிதல் வேண்டும். அத்துடன் பவளம், நீலக்கல் பதித்த ஆபரணங்களை அணியலாம்.

வழிபாடுகள் – முதலில் விக்னேஸ வரர் அதன்பின் குல தெய்வ வழிபாடு செய்து, தொடர்ந்து சூரியனுக்கு பொங்கல் வைத்து வழிபாடு செய்து, குரு, பெற்றோரை வணங்கி ஆசி பெற்று, தானதருமங்கள் இயற்றி உறவினர்களுடன் அளவளாவி அறுசுவை உணவுடன் பிட்டு புசித்து கண்ணாடியில் தரிசனம் செய்து புதிய வருஷ பலன்களைக் கேட்டு அறிந்து கொள்ளவும்.

தோஷ நட்சத்திரங்கள் – பூசம், மகம், பூரம், உத்தரம் 1ம்,2ம் கால்கள், அனுசம், பூரட்டாதி 4ம் கால், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் தவறாது மருத்து நீர் தேய்த்து ஸ்நானம் செய்து, இயன்ற தானதருமங்கள் செய்து சங்கிரம தோசத்தை நிவர்த்தி செய்து கொள்ளல் வேண்டும்.

**விஷு புண்ணிய காலம்**

**14/04/2018 - சனிக்கிழமை அதிகாலை 03.00 மணி முதல் முற் பகல் 11.00 மணி வரை விஷு புண் ணிய காலமாகும்.**

**விளம்பி வருஷ கைவிசேஷ தினங்கள்**

**வாக்கிய பஞ்சாங்கம்**

**14.4.2018 - சனிக்கிழமை - பகல் 12.15 மணிமுதல் 2.10 மணிவரை**

**14.4.2018 - சனிக்கிழமை - இரவு 6.21 மணிமுதல் 8.13 மணிவரை**

**16.4.2018 - திங்கட்கிழமை - பகல் 12.30 மணிமுதல் 2.02 மணிவரை**

**16.4.2018 - திங்கட்கிழமை - இரவு 6.13 மணிமுதல் 7.24 மணிவரை**

## திருக்கணித பஞ்சாங்கம்

**விஷு புண்ணிய காலம்**

**14.04.2018 - சனிக்கிழமை அதிகாலை 03.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரை விஷு புண்ணிய காலமாகும்.**

**விளம்பி வருஷ கைவிசேஷ தினங்கள்**

**திருக்கணித பஞ்சாங்கம்**

**14.4.2018 - சனிக்கிழமை - பகல் 11.00 மணிமுதல் 12.05 மணிவரை**

**14.4.2018 - சனிக்கிழமை - பகல் 1.00 மணிமுதல் 2.00 மணிவரை**

**16.4.2018 - திங்கட்கிழமை - பகல் 10.45 மணிமுதல் 11.58 மணிவரை**

விளம்பி வருஷம் சித்திரை மாதம் முதலாம் திகதி (14.04.2018) சனிக் கிழமை காலை 8.13 மணியளவில் 'விளம்பி' என்னும் பெயருடைய தமிழ்ப் புத்தாண்டு உதயமாகிறது. அன்று நட்சத்திரம் உத்தரட்டாதி முதலாம் பாதம். திதி அபரபட்ச திரயோதசி. இது 60 வருட சுற்றுவட்டத்தில் 32 ஆவது வருஷமாகும். பங்குனி 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை பின் னிரவு 4.13 மணிமுதல் மறுநாள் சித்திரை முதலாம் திகதி சனிக் கிழமை பகல் 12.13 மணி வரை 'மேட சங்கிரமான புண்ணிய காலமாகும்'. புது வருஷம் பிறக் கும் போது உதயலக்கினம் 'இடபம்' ஆகும்.

இப்புண்ணிய காலத்தில் சகலரும் சங்கற்ப பூர்வமாக மருத்துநீர் தேய்த்து தலையில் ஆலிலையும் காலில் இலமிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து நில நிறப்பட்டாடையிலும் அல்லது நீலக் கரை வைத்த வெள்ளைப் புது வஸ்திரமாயினும் தரித்து இந்திர நீலம் பதிக்கப்பட்ட ஆபரணங்களை அணிந்து நித்திய கர்மானுஷ்டானம் முடித்து கண்ணாடி, தீபம், பூரண கும்பம் முதலான மங்கல பொருள்களைத் தரித்து விநாயகர் முதலிய இஷ்ட குல தெய்வங்களைத் தரிசனம் செய்து தத்தம் இல்லங்களில் புதுவருட சூரியனுக்குப் பொங்கல் பூசை வழிபாடுகள் செய்து, குரு, பெற்றோர் முதலான பெரியார்களை வணங்கி அவர்களின் ஆசிபெற்று இயன்ற தான, தர்மங்கள் வழங்கி பிதிர் விரதானுசாரிகள் சிரார்த்தம், தர்ப்பணம் என்பன செய்து நண்பர்கள், விருந்தினர்களை வரவேற்று சுற்றமித்திரர்களுடனிருந்து எள்ளன்னம், வேப்பம்பூ, நெல்லிக் காய்த் துவையல் முதலியவற்றுடன் அறுசுவைப் பதார்த்தங்களையும் போசனம் செய்து தாம்பூலம் ருந்தி சுகந்த சந்தன புஷ்பாதிகளை அணிந்து புதுப்பஞ்சாங்க பலன்களைக் கேட்டுப் புது வருடத்தில் ஆற்றக் கூடிய நற்கருமங்களைச் சிந்தித்து மங்கலகரமாக வாழ்வார்களாக.

**சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்**

பூசம், மகம், பூரம், உத்தரம் முதலாம் பாதம், அனுசம், பூரட்டாதி நான்காம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி.

**மருத்துநீர் தயாரித்தல்**

இது தாழம்பூ, தாது மாதுளம்பூ, தாமரைப்பூ, துளசி, வில்வம், அறுகு, பால், கோமயம், கோசலம், கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், மஞ்சள், சுக்கு, திப்பலி ஆகியவற்றைச் சுத்த ஜலத்தில் இட்டுக் காய்ச்சிய கசாயமாகும். பூவகை கிடையா விடின் அவைகளின் இலை, பட்டை, வேர், கிழங்கு யாதாயினும் உபயோகிக் கலாம்.

# ரணிலை ஆதரிக்கக் கூட்டமைப்பு நிபந்தனைகள் விதித்தது தவறல்ல

## கூறுகிறார் அசாத் சாலி



கொழும்பு, ஏப்.12

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கூட்டமைப்பு நிபந்தனை விதித்து ரணிலுக்கு ஆதரவு தெரிவித்ததில் எவ்வித தவறும் இல்லை.

இவ்வாறு தெரிவித்தார் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் அசாத் சாலி.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நிபந்தனை களை முன்வைத்து, தமிழ் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் அதிகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளது என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தற்போது, பொதுஜன பெரமுன என்ற மொட்டுச்சின்னக்காரர்கள் தொடர்ச்சியாகச் செய்தியாளர் சந்திப் புக்களை நடத்தி வருகின்றனர்.

இதில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த பிரதமராக முடியாமை குறித்து, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கண்ணீர் விட்டு அழுகிறார். பிரதமர் கனவைக் கலைத்து விட்டுத் தற்போது, எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக அழுகின்றார். சம்பந்தரை நீக்கிவிட்டு அதனைத் தமக்குக் கொடுக்குமாறு கேட்கின்றார்.

இந்த நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருமுறை பதவி வகித்த மஹிந்த, கீழிறங்கி அற்பத்தனமாக எதிர்க்கட்சித் தலைவர்பதவிக்காக ஏங்குகின்றார். இப்பொழுது திருமண வீடுகளுக்கு பலவந்தமாகச் செல்கிறார். யாரும் அவரை அழைக்கவில்லை என்றாலும் பரவாயில்லை, அவராகவே செல்கிறார்.

கூட்டமைப்புடன், பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஒப்பந்தம் செய்து, அவர்களுக்கு நிறைய விடயங்களைக் விட்டுக் கொடுக்கவுள்ளதாக கூறுகிறார்.

வடக்கில் தமிழர்களின் சொத்துக்களையும், கிழக்கில் முஸ்லிம்களின் சொத்துக்களையும் யுத்த காலத்தில் இராணுவத்தினர் பலவந்தமாக பெற்றுக் கொண் டனர். அவற்றை மீளக் கொடுக்குமாறு கோருவது பிழையா?

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் னர் மக்களிடம் பெற்ற காணிகளை மீள ஒப்படைப்போம் என்று கூறினார்கள். பிரதமருக்கு வாக்களிக்க, அதனை இப்போது செய்யுமாறு கோருவது தவறா?

மக்களின் சொத்துக்களை மஹிந்த அச்சுறுத்திச் சூறையாடினார். அதனை மக்கள் மீளக்கோருவது தவறில்லை. அவற்றை மீளக் கோருவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முழு உரிமையும் இருக்கிறது.

இந்த அரசுடன் கலந்துரையாடி, அவர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க, அவர்கள் கோரிய 16 விடயங்களில் 10 விடயங்களைக் கொடுக்க அரசு ஒப்புக்கொண்டமைக்காகச் சந்தோசப்படுங்கள். என்றார். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# காவிரியும் ஐ.பி.எல்லும் மைதானத்தில் நடந்த 5 போராட்டங்கள்


– விஷ்ணுப்ரியா

> உலகம் முழுவதும் விளையாட்டு வீரர்கள் சமூகப் பிரச்சினைகளுக்கு தங்கள் பிரச்சினை குறித்து பறைசாற்ற மைதானங்களைத் தகுந்த இடமாக சில நேரங்களில் பயன் படுத்தியுள்ளனர். அதில் மிக முக்கியமா கக் கருதப்படும் ஐந்து நிகழ்வுகள் இங்கே.–

தமிழகத்தை தற்போது பரபரப்பாக வைத்துள்ளது காவிரி விவகாரம். காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பல்வேறு போராட்டங்கள் முன்னிறுத்தப்பட்டு வரும் நிலையில், சென்னையில் ஐ.பி.எல். போட்டி நடத்தக்கூடாது என பல அமைப்புகளும் போராடி வருகின்றன.

அதன் ஒரு பங்காக சென்னையில் கிரிக்கெட் போட்டியில் வீரர்கள் கறுப்பு பேட்ஜ் அணிந்து விளையாட வேண்டும் என நடிகர் ரஜனிகாந்த் தெரிவித்திருந்தார். இது நடைமுறைச் சாத்தியமா என்பது ஒரு புறம் இருக்க, உலகம் முழுவதும் விளையாட்டு வீரர்கள் சமூகப் பிரச்சினைகளுக்கு தங்கள் பிரச்சினை குறித்து பறைசாற்ற மைதானங்களைத் தகுந்த இடமாக சில நேரங்களில் பயன் படுத்தியுள்ளனர். அதில் மிக முக்கியமாகக் கருதப்படும் ஐந்து நிகழ்வுகள் இங்கே.–





### வியட்நாம் போருக்கு எதிராக குரல் கொடுத்த முகமது அலி

வியட்நாம் போர் நடைபெறும் சமயத்தில் குத்துச் சண்டை வீரர் முகமது அலி அமெரிக்க ராணுவத்தில் சேர்ந்து வியாட்நாமுக்கு எதிராக போர் புரிய வேண்டும் என்று சிலர் கூறினர். இந்நிலையில், அமெரிக்காவில் சில நீக்ரோ இன மக்கள் நாய்களை போன்று நடத்தப்பட்டு வருகின்றனர், அவர்களுக்கு அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. அப்படி இருக்க நான் எதற்காக சீருடை அணிந்து கொண்டு வியட்நாமில் உள்ள மாநிற மக்கள் மீது குண்டு போட வேண்டும் என வியட்நாம் போருக்கு தன் எதிர்ப்பை முகமது அலி தெரிவித்தார்.

### ஒலிம்பிக்கில் எதிர்ப்பு


அமெரிக்காவில் வசிக்கும் கறுப்பின மக்களின் வறுமையை சுட்டிக்காட்டும் வகையில், 1968ஆம் ஆண்டில் மெக்சிக்கோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் நடைபெற்ற தங்கப்பதக்கம் வென்ற டாமி ஸ்மித்தும், வெண்கலப் பதக்கம் வென்ற ஜோன் கர்லோஸும், அமெரிக்க தேசிய கீதம் வாசிக்கும்போது கறுப்பு நிற கையுறை அணிந்து தங்கள் கைகளைத் தூக்கினர். இது விளையாட்டுத் துறையில் மிக முக்கிய சம்பவமாக கருதப்படுகிறது. மேலும் அவர்களின் அந்த புகைப்படம் இருபதாம் நூற்றாண்டில் மிகவும் பேசப்பட்ட ஒரு புகைப்படமாகும்.

### மொஸ்கோ, லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கு எதிர்ப்பு

ஆப்கானிஸ்தானை ரஷ்யா ஆக்கிரமித்ததை எதிர்த்து 1980ஆம் ஆண்டு மொஸ்கோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளை அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் புறக்கணித்தன. அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் 1984ஆம் ஆண்டு லொஸ்ஏஞ்சல்ஸில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியை ரஷ்யா மற்றும் அதன் நேச நாடுகள் புறக்கணித்தன.

### ஜனநாயகத்துக்கு ஆதரவாக கிரிக்கெட் வீரர்கள்

றொபர்ட் முகாபே ஆட்சியை எதிர்த்து ஸிம்பாப்வே கிரிக்கெட் வீரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். 'ப்ளாக் ஆர்ம் பேண்ட்'(Black arm band protest) போராட்டம் என்னும் அப்போராட்டம் ஸிம்பாப்வே கிரிக்கெட் வீரர்கள் ஆண்டி ஃப்ளவர் மற்றும் ஹென்றி ஒலங்காவால் 2003ஆம் ஆண்டு உலகப் போட்டியில் முன்னெடுக்கப்பட்டது. அவர்கள் இருவரும் தங்கள் கைகளில் கறுப்பு நிற பேண்டை அணிய திட்டமிட்டனர். ஸிம்பாப்வேயில் ஜனநாயகம் அழிந்து வருவதற்கு வருத்தம் தெரிவிக்கும் வகையில் அவர்கள் இந்தப் போராட்டத்தை நடத்தினர்.



### முட்டியிட்டு எதிர்ப்பு

அமெரிக்காவில் கறுப்பின மக்கள் மீது பொலிஸார் அடக்குமுறையை பயன்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கில், 2016ஆம் ஆண்டு தேசிய கால்பந்து லீக் போட்டியில் கால்பந்து வீரர் கோலின் கேப்பர்னிக் தேசிய கீதம் பாடும்போது முட்டியிட்டு தனது எதிர்ப்பைத் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து பல நட்சத்திரங்களும் விளையாட்டு வீரர்களும், இனவாதம், அநீதி மற்றும் பொலிஸாரின் அடக்குமுறை ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். ★



# சு.கட்சியின் 16 அமைச்சர்கள் எதிர்க்கட்சியில் அமர்வார்கள்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 அமைச்சர்கள் எதிர்க்கட்சியில் அமர்ந்து கொள்வார்கள் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வுகளின் போது குறித்த பதினாறு அமைச்சர்களும் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொள்வார்கள்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பின் போது வாக்களித்தவர்கள் இவ்வாறு எதிர்க்கட்சியில் அமர்ந்து கொள்வார்கள்.

பிரதமருக்கு எதிராக வாக்களித்த இந்த பதினாறு அமைச்சர்களும் அரசுக்குத் தேவையில்லை என்ற போதிலும், நாட்டு மக்களின் ஆதரவு அவர்களுக்கு உண்டு.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது முதுகெலும்பை நேராக வைத்துக் கொண்டு இந்த 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாக்களித்திருந்தனர்.

இந்த பதினாறு அமைச்சர்களும் கூட்டு எதிர்க் கட்சியில் இணைந்து கொண்டால் கூட்டு எதிர்க் கட்சி மேலும் வலுப்பெறும்.



மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

எதிர்க்கட்சி மக்களின் இருதயத்திற்கு நெருக்கமாகியுள்ளது. மக்களுக்கு தற்பொழுது எதிர்க்கட்சி தொடர்பில் எதிர்பார்ப்பு காணப்படுகின்றது.

இந்த அரசு ஆட்சி பீடம் ஏறியது முதல் மக்களுக்கு என்ன செய்துள்ளது என நாம் கேள்வி எழுப்புகின்றோம் என மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு கூறியுள்ள போதிலும், குறித்த 16 அமைச்சர்களும் நாங்கள் அரசிலிருந்து விலகினாலும், மஹிந்த அணியுடன் சேரமாட்டோம் என அதிரடியாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மஸ்கெலியா பிரதேச சபையில் கலவரம்; 38 பேருக்கு நீதிமன்றம் அழைப்பாணை!



கொழும்பு, ஏப். 12

மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளரை நியமிக்கும் நோக்கில் மஸ்கெலியா பகுதியில் ஏற்பட்ட பதற்ற நிலை மற்றும் கல்வீச்சுத்தாக்குதல் தொடர்பான சம்பவம் குறித்து 38 பேருக்கு ஹற்றன் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என ஹற்றன் பொலிஸ் வட்டாரத்திற்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் தெரிவித்தார் .

மேலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவாளர்கள் 19 பேருக்கும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஆதரவாளர்கள் 19 பேருக்குமாக மொத்தம் 38 பேருக்கு எதிர்வரும் 25ஆம் திகதி ஹற் றன் நீதிவான் நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிமன்றினால் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 28 ஆம் திகதி புதன் கிழமை மஸ்கெலியா பிரதேச சபைக்கான தவிசாளரை தெரிவு செய்யும் நோக்கில் ஐக்கிய தேசிய கட்சியைச் சார்ந்த ரஞ்சனி என்ற உறுப்பினர் வாக்களிப்புக்கு கலந்துகொள்ளாமை தொடர்பில் ஏற்பட்ட பதற்ற நிலை காரணமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவாளர்களுக்கும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஆதரவாளர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் மற்றும் கல்வீச்சு சம்பவம் தொடர்பிலும் பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்தமை தொடர்பிலும் இந்த அறிக்கை ஹற்றன் நீதி மன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதல் சம்பவம் தொடர்பில் கண்காணிப்பில் ஈடுபட்ட இரகசிய பொலிஸாரால் இந்த 38 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர் என மஸ்கெலியா பொலிஸாரால் தெளிவுபடுத்தப்பட்டமைக்கு அமைவாக இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடதக்கது.

## குடிசையில்லா நகரமாக 10 வருடங்களில் கொழும்பு

கொழும்பு, ஏப். 12

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த நகரங்களில் குறைவருமானம் பெறும் குடிசைகளிலும், தற்காலிக வீடுகளிலும் வாழும் மக்களுக்காக வீட்டுத்திட்டம் ஒன்றை செயற்படுத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக 50 ஆயிரம் வீடுகளை அமைத்து குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை அங்கு குடியேற்றவுள்ளதோடு, அடுத்த சிலவருடங்களில் இந்தசெயற்றிட்டத்தை நிறைவுசெய்ய எதிர்ப்பார்க்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தத் திட்டத்தின் இரண்டாம் மூன்றாம் கட்டங்கள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்படும் பட்சத்தில், கொழும்பில் வீடில்லாப் பிரச்சினைக்கு முழுயான தீர்வு காணப்படுமெனவும், குடிசைகளில் வாழும் மக்களை அந்த வீடுகளில் குடியமர்த்திய பின்னர் அந்த இடங்களை வர்த்தக தேவைகளுக்காக பயன்படுத்த முடியும்.

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த நகரங்களை மையமாகக் கொண்டு இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதோடு, மூன்று கட்டங்களும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் பட்சத்தில் 10 வருடங்களில் கொழும்பில் உள்ள அனைத்து குடிசை வீடுகளும் அகற்றப்பட்டு விடும்.



பிரதமர் ரணில் தெரிவிப்பு

முதற்கட்டமாக 2023ஆம் ஆண்டுக்குள் 50 ஆயிரம் வீடுகளை அமைத்து குறைவருமானம் பெறும் குடும்பங்களை அங்கு குடியமர்த்த எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரித்தானிய அரச மாளிகைக்குள் இலங்கைப் பெண்ணுக்கு அங்கீகாரம்!

கொழும்பு, ஏப். 12

பிரித்தானிய இளவரசர் ஹரியின் திருமணத்தை ஒளிபரப்பும் வாய்ப்பை கனேடிய தொலைக்காட்சி செய்தி சேவையின் ஊடகவியலாளர் பெற்றுள்ளார்.

இலங்கையை பூர்வீகமாக கொண்ட ஆன் மேரி அபேசிங்க மெடிவக்கே என்பவரே இந்த வாய்ப்பை பெற்றுள்ளார். இவர் 1975ஆம் ஆண்டு கண்டியில் பிறந்தவர்.

அவர்மெர்வின்மெடிவகேவின் மகளாவார். அவர்தனதுகுடும்பத்துடன் கனடாவுக்கு குடிபெயர்ந்து வாழ்ந்து வருகின்றார்.

அவர்கனேடியதொலைக்காட்சி ஒளிபரப்பாளருக்கு கிடைக்கக்கூடிய மிக உயர்ந்த விருதுகளை வென்றுள்ளார்.

கனேடிய ஒளிபரப்பு தொலைக்காட்சி மற்றும் தொலைக்காட்சி வலையமைப்பின் முதன்மையான தொலைக்காட்சிச் செய்திகளை ஒளிபரப்பியுள்ளார்.

ஆன் மேரி தனது தொலைக்காட்சி வாழ்க்கையை 1993 ஆம் ஆண்டில் Lethbridge இல் இளவயதினராக தொடங்கியுள்ளார்.



அங்கு Alberta பகுதியில் உள்ள உள்ளூர் தொலைக்காட்சிக்காக குழந்தைகள் மற்றும் இளைஞர்களுடன் தொடர்புடைய நிகழ்ச்சிகளை எழுதவும் தயாரிக்கவும் ஆரம்பித்தார்.

1990ஆம்ஆண்டுகளில் ஆன்மேரி தனது வீட்டு மாகாணமான Alberta வில் உள்ள பல்வேறு நிலையங்களில் பணிபுரிந்துள்ளார். அங்கே அவர் தொலைக்காட்சி தொடர்பான எல்லாவற்றையும் அறிந்து கொள்வதில் ஆர்வமாக இருந்தார்.

Alberta வில் 6 ஆண்டுகள் செலவழித்த பிறகு, அவர் CTV க்கு நிருபராக பணியாற்றுவதற்கு ரொரண்டோவிற்கு சென்றார்.

2011 ஆம் ஆண்டில், அவர் 'ஆண்டின் ரொரண்டோ பெண்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றுள்ளார்.

2007ஆம் ஆண்டு அவர் திருமணம் செய்து குழந்தை ஒன்றுக்குத் தாயானார். இந்த நிலையில் அவர் லண்டன் றோயல் திருமணத்தை ஒளி பரப்பும் சந்தர்ப்பத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானிய ராணி எலிசபெத்தின் பேரனும் இளவரசர்வில்லியமின் தம்பியுமான இளவரசர் ஹரிக்கும், அமெரிக்க நடிகையான மேகன் மார்க்லிக்கும் திருமணம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 19 ஆம் திகதி திருமணம் நடை பெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், தற்போது திருமண நிகழ்வின் சில முக்கிய விடயங்களை கென்சிங்டன் அரண்மனை (Kensington Palace) தனது அதிகாரபூர்வ கீச்சகத்தில் வெளியிட்டுள்ளது.

## மாமியாரை தாக்கிய நபருக்கு விளக்கமறியல் உத்தரவு!

கொழும்பு, ஏப். 12

திருகோணமலை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மாமியாரைத் தாக்கி காயப்படுத்திய மருமகன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த நபரை இம்மாதம் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பாலையூற்று, மகமாயபுர பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் சாராயம் குடித்து விட்டு வீட்டுக்குச் சென்று மனைவியின் அம்மாவிடம் பணம் கேட்டு சண்டையிட்டு அவரைத் தாக்கியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir



# மீண்டும் களத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ்

## வெற்றிகளைக் கண்டு ரசிகர்களை குதூகலப்படுத்தி வருகிறது அவ்வணி

**இந்தியாவில், ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் மிகவும் பிரபலமானது. இந்தத் தொடரில் முன்னனணி அணியாகக் கருதப்படும் சி.எஸ்.கே எனப்படும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, இரண்டு ஆண்டு தடைக்குப் பிறகு இந்த ஆண்டு மீண்டும் களமிறங்கியுள்ளது. இந்த நிலையில், அந்த அணியின் தீவிர ரசிகர்கள் இதை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதை, அத்தகைய ரசிகர்களில் ஒருவரான குமரன் குமணன் பி.பி.ஸி. தமிழுடன் பகிர்ந்து கொள்கிறார்.**

2003 ஆம் ஆண்டின் மத்தியில் இங்கிலாந்தில் கவுன்டி போட்டிகள் நடப்பது தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தன. இதே போன்ற வடிவத்தில் இந்தியாவிலும் கிரிக்கெட் போட்டிகள் நடந்தால் எப்படி இருக்கும் என கற்பனை செய்யத் துவங்கினேன். ஆனால் அதனைத் தீவிரமாக நான் யோசிக்கத்துவங்கவில்லை.

காலம் உருண்டோடியது. அது 2008 ஆம் ஆண்டு. அன்று, சென்னையில் ஒரு மூலையில் ஒரு காஃபி கோப்பையுடன் ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு ரசிகன் அமர்ந்திருந்த போது அவனுள் தோன்றிய சிந்தனைபோலவே இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் வந்ததன் விளைவு ஐ.பி.எல்.

முதல் முதலாக நடந்த ஐ.பி.எல். போட்டியிலேயே அதிரடி காட்டினார் பிரெண்டன் மக்கலம். பெங்களூர் அணியை மிக எளிதாக வென்றது கொல்கத்தா அணி. 20 ஓவர் போட்டியில் ஒரு வீரர் 150 ரன்களுக்கும் மேல் எடுத் ததை பார்த்தபோது ஆச்சரியமாக இருந் தது.

ஆனால், எனக்கு அந்தப் போட்டியைவிட அதிகம் நினைவில் நிற்பது, மக்கலம் சதமடித்த முதல் ஐ.பி.எல். போட்டிக்கு மறுநாள் நடந்த போட்டியே. காரணம், அன்றைய நாளான ஏப்ரல் 19 ஆம் திகதியின் இரவில் தான், சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தனது முதல் போட்டியில் விளையாடியது .

கிரிக்கெட்டை ரசித்துப் பார்க்கும் அனைவரும் விரும்பும் மைக்கேல் ஹஸ்ஸி, அன்றைக்கு ஓர் அருமையான சதத்தைப் பதிவு செய்தார். அந்தச் சதத்தின் உதவியுடன் 20 ஓவர்களில் 240 ரன்களைத் தொட்டது சென்னை சூப்பர் கிங்ஸ். பச்சை நிறபுற்களுடன் மொகாலி மைதானம்; தலைக்கு மேல் மின்னொளியோடு மின்னும் கருமை நிற வானம்; அதோடு மட்டுமின்றி, அன்று முதல் மஞ்சள் நிறமும் கிரிக்கெட் ரசிகனான எனக்கு மறக்க முடியாத ஒன்றானது.

சி.எஸ்.கேயுடன் எனக்கு அன்று துவங்கிய பந்தம், அந்த ஆண்டின் இறுதிப் போட்டியில் கடைசி வரை போராடி அந்த அணி தோற்ற பின்னரும் அந்த அணியின் முயற்சிக்காக பலத்த கைத்தட்டல் எழுப்பிய வரை தொடர்ந்தது. அன்று முதல் இன்று வரை ஒரு விஷயத்தை தொடர்ந்து செய்து வருகிறேன்.

மாற்றுத்திறனாளியாகிய நான், எனது ஊன்றுகோலை பிடித்தபடி எழுந்து நின்று மரியாதை செய்யும் வழக்கம் தான் அது. எந்த போட்டியில் எவர் நன்றாக விளையாடினாலும் நான் அப்படி மரியாதை செய்யத் தவறுவதில்லை.

ஐ.பி.எல். இரண்டாவது சீஷன் தென்னா பிரிக்காவில் நடந்தது ஒரு வருத்தம். மேலும் சென்னை சூப்பர் கிங்ஸ் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறாமல் போனது மற்றொரு சோகமாக அமைந்தது எனக்கு மேலும் அந்த தொடரில் சென்னைக்கு கிடைத்தது நான்காம் இடமே. இதுவரையில் ஐ.பி.எல். தொடர்களில் சென்னை அணியின் மோசமானநிலையும் அதுவே. ஐ.பி.எல்லில் சென்னை அணியின் ஆதிக்கத்தை இந்த ஒரு விஷயமே சொல்லி விடும்.

முதல் இரண்டு தொடர்களில் விட்டதை மூன்றாம் மற்றும் நான்காம் தொடர்களில் பிடித்தது சென்னை அணி. ஆம், அடுத்தடுத்த ஆண்டுகளில் மும்பை மற்றும் பெங்களூர் அணிகளை வீழ்த்தி கோப்பையை கைப்பற்றியது. இதில் 2011 ஐ.பி.எல். சீஷன் இறுதிப் போட்டி சென்னையிலேயே நிகழ்ந்ததும் அதில் சி.எஸ்.கே. வென்றதும் பெருமகிழ்ச்சி அளித்தது.

இரண்டு தொடர் வெற்றிகள் என் றாலும் அவற்றில் 2010 வெற்றி சிறப்பானது என்பேன். 2010இல் நடந்த இறுதிப் போட்டியில் சி.எஸ்.கே. வென்ற விதமும், அந்த போட்டியில் பொல்லார்டை சிஎஸ்கே ஆட்டமிழக்கச் செய்த விதமும் முக்கியமானவை.

ஓர் அணித்தலைவராக டோனி ரி – 20 போட்டிகளின் ஆழமும் அடர்த்தியும் உணர்ந்து செயற்பட்டமையால் அதே ஆண்டின் சம்பியன்ஸ் லீக் கோப்பையும் சென்னை வசமானது .இங்கிருந்து தான் மற்ற அணிகளின் ரசிகர்கள் சி.எஸ்.கே அணிக்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கத் தொடங்கினர். 2015 இற்கு பின் அது இன்னும் அதிகமானது .

2012 முதல் 2015 வரை எத்தனையோ பிரம்மாண்ட தருணங்கள் சி.எஸ்.கே. ரசிகனுக்கு வாய்த்தது. ஆனால் மூன்று இறுதிப்போட்டிகளில் ஒன்றில் கூட வெல்ல முடியவில்லையே என்ற வருத்தம் வாட்டியது .

அதிலும் 2014 இல் மும்பையில் இரண்டாம் தகுதிச்சுற்று ஆட்டத்தில் பஞ்சாப் அணிக்கு எதிராக ரெய்னா அடித்த 87ஓட்டங்களில் ஒவ்வொன்றும் பொன்னுக்கு நிகர் என்பேன். நான் எழுந்து நின்ற மற்றொரு தருணம் அது. ஆனால் அப்போட்டியில் ரெய்னா விக்கெட் விழுந்ததும் நடந்த அதிர்ச்சி சரிவை என்னால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. 2015 ஐ.பி எல்லிலும் மும்பை அணியிடம் இறுதிப் போட்டியில் தோல்வி அடைந்தது சென்னை அணி.

2015 பிற்பகுதியில் சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்குத் தடை விதிக்கப்பட்டது. ஆனால் அந்த அணிகளின் வீரர்கள் மற்ற அணிகளில் விளையாடலாம் எனும் விஷயத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. வீரர்கள் விளையாட அனுமதிக்கப்படும் நிலையில். அணிகளை கலைக்காமல் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் இருந்து வேறொரு நிறுவனத்துக்கு கை மாற்றியிருக்கலாமே என்று நினைத்தேன். ஏனெனில் சென்னை சார்பில் எந்த அணியும் அந்த ஐ.பி.எல். சீஷனில் விளையாடவில்லை

2016இல் புனே அணியில் டோனியை பார்க்க வேண்டிய நிலையில் கண்ணீரை கட்டுப்படுத்த இயலவில்லை. 2017 தொடரில் டோனியிடமிருந்து தலைமை பொறுப்பும் பறிக்கப்பட்டது.



கடைசி நிமிடங்களில் சென்னை அணியில் ரசிகர்கள் பதற்றம், பரபரப்புடன்...!





சென்னை சேப்பாக்கத்தில் நேற்றுமுன்தினம் பெரும் பரபரப்புக்கு மத்தியில் கொல் கத்தா நைட் ரைடர்ஸ் அணியை கடைசி ஓவரில் ஐந்தாவது பந்தில் வெற்றி கொண்டபோது...!

### 2018இல் மீண்டும் சி.எஸ்.கே.

முன்பிருந்த அணியை விட வயதான வீரர்கள் அதிகம் மற்றும் பெரிய அளவிலும் உடனடியாகவும் அதிரடி காட்டக் கூடிய வீரர்கள் இல்லை என்பதை தவிர பெரிய குறை ஏதும் காண முடியாத அணியாக இப்போதைய சென்னை அணி உள்ளது. முரளி விஜய் மீண்டும் சென்னை அணிக்குத் திரும்பியமை மகிழ்ச்சி தந்துள்ளது. தென்னாபிரிக்க வீரரான லுங்கிடி சென்னை அணியில் விளையாட உள்ளார். அவரது பந்து வீச்சைக் காண காத்திருக்கிறேன்.

அணி கட்டமைப்பில் என்ன தான் மாற்றங்கள் இருந்தாலும் சரிவில் இருந்து மீளும் போர் குணத்தை களத்திலும் காட்டி அபாரமாக தொடரைத் தொடங்கி விட்டது சி.எஸ்.கே. பிராவோ மற்றும் ஜாதவ் இருவரும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி யின் இரண்டாம் இன்னிங்ஸ் வாழ்க்கையை அமர்க்களமாக தொடங்கி வைத்துள்ளனர்.

2016 ஆம் ஆண்டு முதல் ஒரு ஐ.பி.எல். போட்டி கூட சென்னையில் நடை பெறவே இல்லை என்பதால் ரசிகர்கள் சோகத்தில் இருந்தனர். ரசிகர்கள் ஆரவாரத்துடன் காணப்படும் சேப்பாக்கம் மைதானம் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் ஆள் அரவமற்று இருந்தது.

இந்த ஆண்டு சென்னையில் போட்டி நடத்த அத்தனை ஏற்பாடுகளும் முடிந்த பின்னரும் போட்டிகளை வேறு மாநிலத்துக்கு மாற்ற வேறு சில காரணங்களை முன்வைத்து கோரிக்கை எழுப்பப்படுவதும், கிரிக்கெட் வீரர்களும் ரசிகர்களும் சமூக அக்கறை இல்லாதவர்கள் போன்ற தோற்றம் கட்டமைக்கப்பட்டு வருவதும் என்னைப் போன்ற சி.எஸ்.கே .ரசிகர்களை மனமுடைய வைக்கும் செயல்கள்.

எனக்கு சில நல்ல நண்பர்களை தந்தது கிரிக்கெட்தான் என்பதில் எனக்கு மகிழ்ச்சி. ரி – 20 கிரிக்கெட்டில் சி.எஸ்.கே உலகின் தலைசிறந்த அணிகளில் ஒன்று. சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு ஆண்டாண்டு காலமாக ரசிகராக இருந்து வருவது ஓர் உணர்வும் கூட. அந்த உணர்வை கொண்டாடவும் சி.எஸ்.கே இம்முறை தொடரை வென்றால் மரியாதை செய்ய கம்பீரமாக எழுந்து நின்று பாராட்ட வும் காத்திருக்கிறேன்.

★

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் - 26 விடைகள் (பகுதி I)

| | | | |
|---|---|---|---|
| 1) 3 | 11) 2 | 21) 2 | 31) 2 |
| 2) 3 | 12) 3 | 22) 2 | 32) 2 |
| 3) 3 | 13) 3 | 23) 2 | 33) 1 |
| 4) 1 | 14) 1 | 24) 3 | 34) 1 |
| 5) 1 | 15) 2 | 25) 1 | 35) 2 |
| 6) 3 | 16) 2 | 26) 2 | 36) தொன்மை - புதுமை |
| 7) 1 | 17) 1 | 27) 1 | 37) கொடையாளி - உலோபி |
| 8) 2 | 18) 1 | 28) 3 | 38) பிரியம் - வெறுப்பு |
| 9) 2 | 19) 2 | 29) 1 | 39) செல்வந்தன - வறியவன் |
| 10) 2 | 20) 2 | 30) 2 | 40) 2 |

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் - 26 விடைகள் (பகுதி II)

1)
- I. வரக்காப்பொல
- II. சென்றோம்
- III. பொருள்களை உற்பத்தி செய்யுமிடம்
- IV. அங்கும் இங்கும்
- V. ஆச்சரியமாக
- VI. பெரிய + மலை + தொடர்

2)
- I. ஆளுநர்
- II. தொடங்கியது
- III. ஒளிந்தது

3)
- I. அரவு
- II. மடக்கேறு

4)
- I. நித்திரை
- II. தானம்

5) பாதையில் பாறாங்கற்கள் விழுந்துகிடந்தன

6)
- I. பிடிவாதம்
- II. சொல் தவறுதல்

7)
- I. சகபாடி
- II. உடன்பாடு

8) ஐயோ! என்னைக் காப்பாற்ற மாட்டீர்களா?

9) காடு, கிழவி, கீதம், குடம், கொம்பு

10) மரக்கறி உணவு உடலுக்கு மிகவும் நல்லது

11) Bicycle

12) sun

13)
- I. கோயிலுக்குபோவோமா?
- II. தயவுசெய்துஅமைதியாக இருக்கவும்

14)
- I. மரக்கறி
- II. ஓடம்

15) 4
16) 3
17) 3
18) 3
19) 2
20) 4
21) 2
22) 4
23) 1
24) 4
25) 2
26) 3
27) 4
28) 3
29) 4
30) 1
31) 2
32) 3
33) 4
34) 4
35) 4
36) 3
37) 1
38) 2
39) 2
40) 2
41) 2
42) 3478
43) XV
44) 38
45) 1 மணித்தியாலம் 45 நிமிடம்
46) 7
47) 1. 20 cm
    2. $24cm^2$
48) 8
49)
- I. 13:30
- II. 6 மணித்தியாலம்

50) பொருத்தமான வாக்கியம்





# கல்விக் கதிர் வெளியீடு
புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்
வினாத்தாள் 27
தரம்-5
பகுதி - II

### வினாத்தாள் 27 பகுதி II இன் தொடர்ச்சி...

39) எமது நாட்டின் தேசிய விளையாட்டில் பங்குபற்றும் வீரர்கள் ஒருவருக்கு ஒருவர் கை குலுக்கிக் கொண்டனர். அங்கு இடம்பெற்ற கைகுலுக்கல்கள் எத்தனை?

1.15

2.30

3.21

4.18

40) பாடசாலையின் கடந்தகாலசம்பவங்கள் நிகழ்வுகளை அறிய உதவும் ஆவணம்

1.மகாவம்சம்

2. சூளவம்சம்

3.சம்பவத்திரட்டு

4.மகாபாரதம்

41) சர்வதேச புத்தகதினம் எப்போது கொண்டாடப்படுகின்றது

1.ஏப்ரல் 23

2.மார்ச் 08

3.மார்ச் 22

4.ஜனவரி 12

## வினாத்தாள் 27 பகுதி II இன் தொடர்ச்சி...

42) SLDA இத்தர நிர்வாகச் சான்றிதழை அவதானிக்கக் கூடியபொருள்

1.தீப்பெட்டி

2.மின்னகமிழ்

3.பற்பசை

4.இலவச பாடநூல்

43) ஒருவித்திலைத் தாவரமாகவும் அதேவேளை உணவாகவும் பயன்படும் வித்து

1.பலா

2.சோளன்

3.பப்பாசி

4.பாகல்

44) இலங்கைக்கே உரிய தற்போது அறிமுகப்படுத்தப்பட்ட தேசியமலர்

1.நீலஅல்லி

2.அல்லி

3.தாமரை

4.செவ்வந்தி

45) தரமான தேயிலையை நீரில் இடுமபோது தோன்றும் நிறம்

1.கபிலம்

2.இளமஞ்சள்

3.சிவப்பு

4.ஊதா

46) கொழும்பு நகரைச் சுற்றி ஓடும் நதியின் பெயர்

1.தியவன்ன ஓயா

2.களுகங்கை

3.தெதுறு ஓயா

4.களனிகங்கை



## வினாத்தாள் 27 பகுதி II இன் தொடர்ச்சி...

47) "ரிச்சர்ட்" அளவால் அளக்கப்படும் இயற்கை அனர்த்தம் எது?

1.சுனாமி

2.மழை

3.நிலநடுக்கம்

4.சூறாவளி

48) இலங்கை எத்தனையாவது சுதந்திரதினத்தை 2017 இல் கொண்டாடியது

1.68

2.69

3.67

4.46

49) குளிர்காலத்தில் அணியக்கூடியதும் விலங்கு நாராலும் ஆன ஆடை

1.கம்பளி

2.பட்டு

3.பருத்தி

4.நைலோன்

50) கடதாசிகளால் மடித்துச் செய்யப்படும் ஆக்கம்

1.ஒரிகாமி

2.அல்பனா

3.கொலாச்

4.அச்சுப்பதித்தல்

## உயர் வர்க்கத்தினருக்கு அரசு வேலை ஒதுக்கீடு:

# பங்களாதேஷ் பல்கலை மாணவர் நடத்திய போராட்டத்தில் கலவரம்







100 மாணவர்கள் படுகாயம்

டாக்கா,ஏப்.12

பங்களாதேஷில் உயர் வர்க்கத்தினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அரசு வேலை வாய்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் 100 மாணவர்கள் காயம் அடைந்தனர்.

பங்களாதேஷில் 1971ஆம் ஆண்டு நடந்த சுதந்திரப் போராட்டத்தின்போது பாதிக்கப்பட்ட உயர் வர்க்கத்தினருக்கு அரசு வேலை வாய்ப்பில் 56 வீதம் இட ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டது.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நேற்று முன்தினம் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முன்னதாக வகுப்புகளை புறக்கணித்து விட்டு பல்கலைக்கழக மைதானத்தில் ஆயிரக்கணக்கில் திரண்டனர். வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன. பின்னர் இப்போராட்டம் சிட்டகொங், குல்னா, ராஜ்ஷாகி, பரிசால், ரங்பூர், ஷில்கெட், சாவர் ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக் கழகங் களுக்கும் பரவியது.

இதனால் பொலிஸார் குவிக்கப்பட்டனர். சவார் நகரில் ஜகாங்கீர் நகர் பல்கலைக்கழகத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் திரண்டு போராட்டம் நடத்தினர். அப்போது பொலிஸாருக்கும், மாணவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டு அது கலவரமாக மாறியது.

கலவரத்தை அடக்க பொலிஸார் ரப்பர் குண்டுகள் மற்றும் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர். இதே போன்று தலைநகர் டாக்காவிலும் கலவரம் மூண்டது. இதில் 100இற்கும் மேற்பட்ட மாணவர்கள் காயம் அடைந்தனர்.

டாக்கா பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து போராட்டம் நடந்து வருகிறது. தெருக்களில் இருந்து வெளியேறாமல் மாணவர்கள் போராடி வருகின்றனர். இதனால் அங்கு பதற்றம் நிலவுகிறது.

இப்போராட்டம் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இவரது ஆட்சிக் காலத்தில் இதுபோன்ற மிகப்பெரிய மாணவர் போராட்டம் இதுவரை நடந்ததில்லை.

## அதிக வயதானவராக கின்னஸ் சாதனை



உலகில் வாழ்ந்து வருபவர்களில் அதிக வயதான ஆண்மகனாக ஜப்பான் நாட்டைச் சேர்ந்த மசாஸோ நோனாக்கா (112) என்பவரை கின்னஸ் நிறுவனம் நேற்று அங்கீகரித்துள்ளது.

உலகில் அதிககாலம் வாழ்ந்து வரும் ஆண், பெண்களை உலக சாதனை பதிவுகளை நிர்வகித்துவரும் கின்னஸ் நிறுவனம் அங்கீகாரம் அளித்து, சிறப்பித்து வருகிறது.

இதுவரை உலகில் மிக வயதான நபராக அறியப்பட்ட ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த பிரான்சிஸ்கோ நுனேஸ் ஒலிவேரா 29-1-2018 அன்று தனது 113ஆவது வயதில் மரணம் அடைந்தார்.

இதைத் தொடர்ந்து, ஜப்பான் நாட்டை சேர்ந்த மசாஸோ நோனாக்கா(112) என்பவரை உலகில் வாழ்ந்து வருபவர்களில் அதிக வயதான ஆண்மகனாக கின்னஸ் நிறுவனம் நேற்று அங்கீகரித்துள்ளது.

## சர்வதேச விமானநிலையம்

இஸ்லாமாபாத்,ஏப்.12

பாகிஸ்தானில் அமைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய இஸ்லாமாபாத்சர்வதேசவிமான நிலையம் வருகின்ற 20ஆம் திகதி மக்கள்பயன்பாட்டிற்காக திறக்கப்படவுள்ளது.

பாகிஸ்தானின் மிகப்பெரிய சர்வதேச விமானநிலையம் இஸ்லாமாபாத் நகரில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விமான நிலையத்தின் கட்டுமான பணிகள் 2007ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பல் வேறுபிரச்சினைகளுக்குபிறகு விமானநிலையம் கட்டி முடிக்கப்பட்டது. சூர்மற்றும் ராவல் பிந்தி ஆகிய இரு நகரங்களை இணைத்து இந்த விமான நிலையம் அமைந்துள்ளது.

தூ வடிவில் அமைக்கப்பட்டுள்ள இந்த விமானநிலையம் பாகிஸ்தானின் சர்வதேச விமானங்களில் மிகப்பெரியதாக இருக்கும். இதன் மூலம் ஏராளமான மக்கள் பயன்பெறுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.



## அமெ.நாடாளுமன்றத்தில் மன்னிப்புக் கோரிய மார்க்



வொஷிங்டன், ஏப்.12

அமெரிக்காவின் நாடாளுமன்ற குழு முன் நேற்று முன்தினம் ஆஜரான பேஸ்புக் தலைமை செயல் நிறுவுநர் மார்க் ஜுக்கர்பெர்க், பேஸ்புக் நிறுவனத்தில் நடந்த தவறுகளுக்காக மன்னிப்புக் கோரினார்.

சமூக வலைத்தளங்களின் ஜாம்பவானாக விளங்கும் பேஸ்புக் நிறுவனத்தினால் சமீபத்தில் ஏற்பட்ட குழப்பம் மோடி வெலி வரை சென்றுள்ளது.

அமெரிக்காவில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக சுமார் 5 கோடி அமெரிக்க மக்களின் தகவல்களை பேஸ்புக் நிறுவனம், லண்டனைச்சேர்ந்த கேம்பிரிட்ஜ் அனலிட்டிகா என்னும் நிறுவனத்திற்கு வழங்கியது எனப் பகிரங்கமான குற்றச்சாட்டு வெடித்தது.

இதுதொடர்பாக விசாரணை நடத்த அமெரிக்க நாடாளுமன்றத்தின் மூத்த உறுப்பினர்களை உள்ளடக்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அமெரிக்க நாடாளுமன்றத்தின் குழுவின் முன்னர் பேஸ்புக் தலைமை செயல் இயக்குநர் மார்க் ஜுக்கர்பெர்க் ஆஜராகி பதில் அளித்தார்.

அப்போது அவர் கூறுகையில் –

கல்லூரி பருவத்தில் நான்தான் பேஸ்புக் சமூக வலைத்தளத்தை தொடங்கினேன். அதை நானே நடத்தி வருகிறேன். சுமார் 200 கோடி மக்கள் தங்களுக்கு மிகவும் வேண்டியவர்களுடன் தங்களது வாழ்வின் முக்கிய நிகழ்வுகளை பேஸ்புக் மூலம் பகிர்ந்து கொள்கின்றனர்.

எங்களது பொறுப்புகளை நிறைவேற்றுவது தொடர்பாக அகன்ற தொலைநோக்குப் பார்வையை செலுத்தாமல் போனது பெரிய தவறு.

பேஸ்புக் நிறுவனத்தை நடத்தி வருவதால் அதில் நடக்கும் தவறுகளுக்கு நானே முழுப் பொறுப்பாளி என்பதால் மன்னிப்புக் கோருகிறேன் எனத் தெரிவித்தார்.

## ட்ரம்புடனான பேச்சுத் தொடர்பாக மௌனம் கலைத்த கிம் ஜாங் உன்

சியோல், ஏப்.12

அமெரிக்க அதிபர் ட்ரம்புடன் பேச்சுத் தொடர்பாக வடகொரியா அதிபர் கிம் ஜாங் உன் முதன் முதலாக மௌனம் கலைத்து தனது கட்சியினருடன் ஆலோசனையின் போது விவாதித்து இருக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கும், வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன்னுக்கும் இடையே நடந்து வந்த வார்த்தை யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது. அத்துடன் இருவரும் நேருக்கு நேர் சந்தித்துப் பேச்சு நடத்தக்கூடிய அளவுக்கு இணக்கமான சூழல் உருவாகி வருகிறது. இதில் தென்கொரியாவின் சமரச முயற்சிகள் வெற்றி அளித்து வருகின்றன.

ட்ரம்பும், கிம் ஜாங் உன்னும் மே மாதம் அல்லது ஜூன் மாதத்தின் தொடக்கத்தில் சந்தித்துப் பேச்சு நடத்துவார்கள் எனத் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இது தொடர்பான முன் ஏற்பாடுகளை கவனிப் பதற்கு இரு நாட்டு உயர் அதிகாரிகளும் சந்தித்துப்பேசியுள்ளனர்.

கிம் ஜாங் உன்னுடன் பேச்சு நடத்தப்போவது பற்றி ட்ரம்ப் டுவிட்டரில் நேரடியாக தெரிவித்து விட்டார். ஆனால் கிம் ஜாங் உன் மட்டும் இந்த விடயத்தில் நேரடியாக எந்த கருத்தும் தெரிவிக்காமல் மௌனம் காத்து வந்தார்.

இந்த நிலையில், இப்போது அவர் தன் மௌனத்தைக் கலைத்துக்கொண்டு கருத்து வெளியிட்டு உள்ளார்.

நேற்றுமுன்தினம் பியாங்யாங் நகரில், கிம் ஜாங் அன் தனது கட்சியினருடன் நடத்திய ஆலோசனையின் போது, அமெரிக்காவுடன் நடத்த உள்ள பேச்சு பற்றிக் குறிப்பிட்டு விவாதித்து இருக்கிறார். இதை அந்த நாட்டின் அரசு செய்தி நிறுவனமான கே.சி.என்.ஏ. உறுதி செய்துள்ளது.

எனினும் ட்ரம்புடனான கிம் ஜாங் உன்னின் சந்திப்பு எங்கு, எந்த திகதியில் நடைபெறும் என்பது இன்னும் உறுதிசெய்யப்படவில்லை.

# கைகளை பின்னால் கட்டி நீச்சல் அடித்த குழந்தைகள்

கேரளா மாநிலம் எர்ணா குளம் மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு குழந்தைகள் கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு பெரியார் ஆற்றில் நீச்சல் அடித்து சாதனை படைத்துள்ளனர்.

கேரளா மாநிலம் எர்ணாகுளம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆலுவா மனப்புரம் பகுதியைச் சேர்ந்த சைபா (வயது - 8) மற்றும் அவரது சகோதரர் கிஷாம்(வயது - 5) இருவரும் சாஜி வலச்சேரி என்பவரிடம் நீச் சல் பயிற்சி பெற்று வருகின்றனர். இந்நிலையில் இருவரும் மக்களில் நீச்சல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தப் புதிய முயற்சியில் ஈடுபட்டனர்.

இருவரும் கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு பெரியார் ஆற்றில் ஆஷ்ரமன் கடவு பகுதியிலிருந்து ஆலுவா மனப்புரத்திற்கு நீச்சல் அடித்துக் கொண்டு வந்தனர். 25 நிமிடங்களில் வெற்றி இலக்கை எட்டினர். இந்த முயற்சியின்போது சிறுவர்களுக்கு பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

நீச்சல் மிகவும் அத்தியாவசியமான பாதுகாப்பு பயிற்சி. இதனைக் கற்றுக்கொள்வதன் மூலம் நீரில் மூழ்கிப் பலியாவதைத் தடுக்கலாம். யார் வேண்டு மானாலும் நீச்சல் பயிற்சியைக் கற்றுக்கொள்ளலாம் என்பதை உணர்த்தவே இந்த முயற்சியை மேற் கொண்டோம் என்று சிறுவர்கள் தெரிவித்தனர்.



## ஐ.பி.எல். எதிர்ப்பு போராட்டம்

# பாரதிராஜா, வைரமுத்து, சீமான் உள்ளிட்ட 500 பேர் மீது வழக்கு





சென்னையில் நேற்று முன்தினம் ஐ.பி.எல். போட்டிக்கு எதிராகப் போராட் டம் நடத்திய பாரதிராஜா, வைரமுத்து, சீமான் உள்ளிட்ட 500 பேர் மீது பொலி ஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

காவிரி மேலாண்மைச்சபை அமைக்க வலியுறுத்தி தமிழகத்தில் அரசியல் கட்சிகள், விவசாயிகள் மற்றும் பல் வேறு அமைப்புகள் சார்பில் போராட் டங்கள் நடைபெற்று வருகின்றன. இந்த விஷயத்தில் மத்திய அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஐ.பி.எல். போட்டிகளைத் தமிழகத்தில் நடத்தக்கூடாது என்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டது. ஆனால் திட்ட மிட்டபடி ஐ.பி.எல். போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சென்னை அண்ணா சாலையில் அர சியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகள் சார்பில் போராட்டம் நடைபெற்றது. இதனால் கடும் போக் குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பொலி ஸார் தடுப்பு வேலி அமைத்து போராட் டக்காரர்களை மைதானம் நோக்கி செல்ல விடாமல் தடுத்தனர். தடையை மீறிச் சென்ற போது தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

போராட்டம் நடத்திய இயக்குநர்கள் பாரதிராஜா, அமீர் மற்றும் வைரமுத்து, நாம் தமிழர் கட்சித்தலைவர் சீமான், எம்.எல்.ஏக்கள் கருணாஸ், தமீமுன் அன்சாரி உள்ளிட்ட 500 இற்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், ஐ.பி.எல். போட் டிக்கு எதிராகப் போராட்டம் நடத்திய பாரதிராஜா, வைரமுத்து, சீமான், தமீ முன் அன்சாரி, கருணாஸ், பி.ஆர்.பாண் டியன் உட்பட 500 பேர் மீது பொலி ஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

## அ.தி.மு.க. அரசுக்கு காவிரியை விட கிரிக்கெட் நடத்துவது முக்கியமானது



சென்னை,ஏப்.12

காவிரிப் பிரச்சினையை விடக் கிரிக் கெட் போட்டியை நடத்துவது அ.தி.மு.க. அரசுக்கு முக்கியமாகி விட்டது வேதனை யளிக்கிறது என தி.மு.க. செயல் தலை வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டா லின் தனது முகநூலில் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

ஐ.பி.எல் கிரிக்கெட்டிற்கு எதிராக அற வழியில் போராடியவர்கள் மீது பொலிஸ் தடியடி நடத்தியமை கண்டனத்திற்குரி யது. வாலாஜா வீதி போராட்டகளமாக மாறியிருப்பது தமிழக மக்களின் உணர்வுகளை எந்த அளவிற்கு மாநில அரசுகள் அவமதித்துள்ளன என்பதைக் காட்டுகிறது.

பாரதிராஜா, வைரமுத்து உள்ளிட் டோரை கைது செய்து, அமைதியாக போராடியவர்கள்மீதுதடியடிநடத்திகாவிரி போராட்டத்தைத் திசைதிருப்பத் தமிழக பொலிஸாரை அ.தி.மு.க. அரசு பயன் படுத்துவது வெட்கக்கேடு. தமிழுணர்வு அ.தி.மு.க. அரசுக்கு அறவே பட்டுப்போய் விட்டது. காவிரிப் பிரச்சினையை விட கிரிக்கெட் போட்டியை நடத்துவது அ.தி. மு.க. அரசுக்கு முக்கியமாகி விட்டது வேத னையளிக்கிறது.

காவிரி உரிமைகளைக் காலில் போட்டு மிதித்துக் கொண்டு இருக்கும் எடப்பாடி அரசு இனி ஆளும் அனைத்து தகுதியையும் இழந்து நிற்கிறது. பொலி ஸாரின் அத்துமீறலையும், அ.தி.மு.க. அரசு பொலிஸ் அதிகாரிகள் கட்டவிழ்த்து விடும் அராஜகத்திற்கும் கடும் கண்ட னத்தை தெரிவித்துக்கொள்கிறேன். அதே போல் போட்டியில் பங்கேற்ற சிலர் மீது நடத்தப்பட்ட தாக்குதலும் கண்டிக் கத்தக்கது. எப்போதும் அறவழியில் நடத்தப்படும் போராட்டமே வெற்றி பெறும் என்று தெரிவித்துள்ளார்.

# கிரிக்கெட்டுக்கு இல்லை, காவிரிக்கான போராட்டம்



## வைரமுத்து தெரிவிப்பு

ஐ.பி.எல். போட்டி நடைபெற இருக்கும் நேரத்தில் அண்ணா சாலை யில் போராட்டத்தில் ஈடுபட்ட கவிப் பேரரசு வைரமுத்து கிரிக்கெட்டுக்கு எதிரான போராட்டம் இல்லை, காவி ரிக்கான போராட்டம் என்று கூறியிருக் கிறார்.

கடந்த சில நாள்களாக தமிழ்நாட்டில் காவிரி மேலாண்மை அமைக்கவும், ஸ்டெர்லைட் ஆலையை மூடவும் போராட்டம் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், சென்னை சேப்பாக் கம் மைதானத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளுக்கு இடையிலான ஐ.பி. எல். போட்டி நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு இடம்பெற்றது. இந்தப் போட்டிகளை நடத்துவதற்குப் பல் வேறு கட்சிகள், அமைப்புகள் எதிர்ப் புத் தெரிவித்தும் அவை திட்டமிட்ட படி நடந்தன.

இது தொடர்பாகக் கருத்து வெளி யிட்ட வைரமுத்து, 'இது கிரிக்கெட் டுக்கு எதிரான போராட்டம் இல்லை, காவிரிக்கான போராட்டம். பொலி ஸாருக்கு எதிரான போராட்டம் அல்ல. தமிழருக்கான போராட்டம் என்று தெரிவித்துள்ளார்.

# ஜம்மு - காஷ்மீரில் பயங்கரவாதிகள் தாக்கு

ஜம்மு - காஷ்மீரின் குல்காம் மாவட்டத் தில் நேற்றுப் பாதுகாப்புப் படையினருக் கும், பயங்கரவாதிகளுக்கும் இடையே யான துப்பாக்கிச்சண்டையில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தின் குல்காம் மாவட்டத்தில் சில பயங்கரவாதிகள் பதுங்கி யுள்ளனர் எனப் பாதுகாப்புப் படையின ருக்கு கிடைத்த தகவலை அடுத்து தீவிரத் தேடு தல் வேட்டையில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில், நேற்று அதிகாலை பாதுகாப்புப் படையினரை நோக்கி பயங் கர +வாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ள னர். இதில் 3 வீரர்கள் காயமடைந்துள்ள னர். வைத்தியாலையில் அனுமதிக்கப் பட்ட நிலையில் இருவர் உயிரிழந்துள்ள னர் எனத் தெரிவிக்கப்படுகிறது.



இருவர் சாவு

# தொலைபேசி வெடித்து 12 வயது சிறுவன் பலி

சத்தீஸ்கர் மாநிலத்தில் சார்ஜ் செய்த படியே செல்போனில் வீடியோ கேம் விளையாடியபோது அது வெடித்ததில் சிறுவன் பலியானான்.

சத்தீஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்த 12 வயது சிறுவன் ரவி சோன்வான் குத்ராப் பரா கிராமத்தில் நேற்றுமுன்தினம் இரவு தொலைபேசியில் வீடியோ கேம் விளை யாடிக் கொண்டு இருந்தான்.


வெகு நேரம் விளையாடியதால் சார்ஜ் குறைந்து கொண்டே போனது. இதனால் மின்சார பிளக்கில் சார்ஜ் போட்டபடியே விளையாட்டை தொடர்ந்தான். ஏற்கனவே சூடாகிஇருந்தசெல்போன்சார்ஜ்போட்டதால் மேலும் சூடாகி திடீர் என்று வெடித்தது.

சிறுவன் முகத்தில் காயம் ஏற்பட்டு ரத் தம் கொட்டியது. இதனால் சிறிது நேரத் தில் சிறுவன் இறந்தான். அவனுடன் வேடிக்கை பார்த்த மற்றொரு சிறுவனுக் கும் காயம் ஏற்பட்டுள்ளது.

## ஐ.பி.எல். தொடரில் கம்மின்ஸ் விலகல்

மும்பை இந்தியன்ஸ் அணியில் இடம் பெற்றிருந்த ஆஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் பாட் கம்மின்ஸ் முதுகு வலி காரணமாகத் தொடரில் இருந்து விலகியுள்ளார்.

மும்பை இந்தியன்ஸ் அணி பாட் கம்மின்ஸை 5.40 கோடி ரூபாவிற்கு ஏலத்தில் எடுத்திருந்தது. மும்பையில் நடந்த முதல் போட்டியிலேயே பாட் கம்மின்ஸ் முதுகுவலி காரணமாக விளையாடவில்லை. இப்போது ஒட்டுமொத்தமாக தொடரில் இருந்து அவர் விலகியுள்ளார். ஏற்கெனவே, ஐ.பி. எல். தொடரிலிருந்து ஸ்டோர்க், நாதன் கோல்டர் நைல், ரபாடா, கேதார் ஜாதவ் ஆகியோர் விலகியுள்ளனர். (ப)





## 200 ஓட்டங்கள் மேல் எடுத்து சென்னை அணி சாதனை

ஐ.பி.எல். போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 2ஆவது முறையாக 200 ஓட்டங்களுக்கு மேல் இலக்கை எடுத்து சாதனை படைத்துள்ளது.

ஐ.பி.எல். போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கொல்கத்தாவை வீழ்த்தி 2ஆவது வெற்றியைப் பெற்றது.

சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த முதல் ஆட்டத்தில் முதலில் விளையாடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 202 ஓட்டங்கள் குவித் தது.

ஆந்த்ரே ரஸ்சல் ஆட்டம் அதிரடியாக இருந்தது. அவர் 36 பந்தில் ஒரு பவுண்ரி, 11 சிக்ஸர்களுடன் 88 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தார். ரொபின் உத்தப்பா 16 பந்தில் 29 ஓட்டங்களும் (2 பவுண்டரி, 3 சிக்ஸர்) உள்ளூர் நாயகனும், கொல்கத்தா கட்டனுமான தினேஷ் கார்த்திக், 26 ஓட்டங்களும் (2 பவுண்ரி, ஒரு சிக்ஸர்) எடுத்தனர். வட்சன் 2 விக்கெட்டும், ஹர்பஜன்சிங், இம்ரான்தாகீர்தலா ஒரு விக்கெட்டும் எடுத்தனர்.

பின்னர் விளையாடிய சென்னை சூப்பர் கிங்ஸ் 203 ஓட்ட இலக்கை எடுத்து முத்திரை பதித்தது. 19.5 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 205 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 200 ஓட்டங்களுக்கு மேல் 2ஆவது முறையாக சேஸ் செய்து சாதனை புரிந்தது. அந்த அணி பஞ்சாப்புக்கு அடுத்த படியாக இருக்கிறது. பஞ்சாப் அணி 3 முறை 200ஓட்டங்களுக்கு மேல் இலக்கை எடுத்துள்ளது.

இந்த ஐ.பி.எல். சீஷனில் இதுவரை நடந்த 5 போட்டியிலும் 2ஆவது துடுப்பாட்டம் செய்த அணியே வெற்றி பெற்று இருக்கிறமை குறிப்பிடத்தக்கது.

ஆசிய கிண்ண கிரிக்கெட்:

## இந்தியாவில் இருந்து அமீரகத்துக்கு மாற்றம்

இந்தியா – பாகிஸ்தான் நாடுகள் இடையே தற்போது சீரான உறவு இல்லாததால் ஆசிய கிண்ணப் போட்டியை இந்தியாவில் இருந்து ஐக்கிய அரபு அமீரகத்துக்கு ஆசிய கிரிக்கெட் சபை மாற்றி இருக்கிறது.

14ஆவது ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி இந்தியாவில் நடத்த திட்டமிடப்பட்டது. ஆனால் இந்தியா – பாகிஸ்தான் நாடுகள் இடையே தற்போது சீரான உறவு இல்லாததால், இந்தியாவில் போட்டியை நடத்த பாகிஸ்தான் எதிர்ப்பு தெரிவித்தது.

இது தொடர்பாக ஆலோசனை மேற்கொண்ட ஆசிய கிரிக்கெட் சபை, ஆசிய கோப்பை போட்டியை இந்தியாவில் இருந்து ஐக்கிய அரபு அமீர கத்துக்கு மாற்றி இருக்கிறது. டுபாய் மற்றும் அபுதாபியில் செப்ரெம்பர் 13ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை இந்தப் போட்டி நடைபெறும். இதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், ஆப் கானிஸ் தான் மற்றும் தகுதிசுற்றில் வெல்லும் அணி என்று மொத்தம் 6 அணிகள் பங்கேற்கும்.



## 2 ஆண்டுகளுக்குப் பிறகு வெற்றி பெற்றது மகிழ்ச்சி

2 ஆண்டுகளுக்கு பிறகு சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் விளையாடுவதைச் சிறப்பாக உணர்கிறேன் எனவும் இந்த வெற்றி மகிழ்ச்சியை அளிக்கிறது எனவும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கப்டன் டோனி கூறியுள்ளார்.

ஐ.பி.எல். போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கொல்கத்தாவை வீழ்த்தி 2ஆவது வெற்றியைப் பெற்றது.

சேப்பாக்கம் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடந்த முதல் ஆட்டத்தில் முதலில் விளையாடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 202 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் விளையாடிய சென்னை சூப்பர் கிங்ஸ் 203 ஓட்டங்கள் இலக்கை எடுத்து முத்திரை பதித்தது. 19.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 205 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றி பற்றி சென்னை சூப்பர் கிங்ஸ் கப்டன் டோனி கூறியவை வருமாறு:-

2 ஆண்டுகளுக்குப் பிறகு சென்னை சேப்பாக்கம் மைதானத்தில்விளையாடுவதைச்சிறப்பாக உணர்கிறேன். இந்த வெற்றி மகிழ்ச்சியை அளிக்கிறது. முதல் இன்னிங்ஸிலும் 2ஆவது இன்னிங்ஸிலும் ரசிகர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து இருப்பார்கள். அந்த அளவுக்கு அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

சாம் களத்தடுப்பு மிகவும் அதிரடியாக இருந்தது. இதே போல கொல்கத்தா அணியும் சிறப்பாகத் துடுப்பாட்டம் செய்தது. இரண்டு அணியின் பந்து வீச்சாளர்களுக்கும் சவாலாக இந்த ஆட்டம் அமைந்தது.

ரசிகர்கள் இந்த ஆட்டத்தில் மிகுந்த சந்தோஷம் அடைந்திருப்பார்கள் என்று தெரிவித்துள்ளார்.



டோனி




அணியும், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும் நேற்று முன்தினம் மோதின. இதில் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வீழ்த்தி சென்னை அணி வெற்றி பெற்றது.

இந்த போட்டியைப் பார்ப்பதற்காக நடிகர் ஷாருக்கான் சேப்பாக்கம் மைதானத்திற்கு வந்திருந்தார். அதுமட்டுமின்றி, டோனியின் மனைவி சாக்ஷி மற்றும் மகள் ஷிவா ஆகியோரும் சேப்பாக்கம் மைதானம் வந்திருந்தனர்.

அவர்கள் இருவரையும் சந்தித்த ஷாருக்கான், டோனி மகளுடன் குறும்புத்தனமாகப் புகைப்படம் எடுத்துக்கொண்டார். டோனியின் மகளும் அழகாக புகைப்படங்களுக்கு போஸ் கொடுத்துள்ளார்.



## சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கொடியுடன் டோனியின் மகள்

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கப்டன் டோனியின் மகளைச் சேப்பாக்கம் மைதானத்தில் வைத்து ஷாருக்கான் சந்தித்து, அவரோடு எடுத்துக் கொண்ட புகைப்படங்கள் டோனி ரசிகர்கள் மத்தியில் அதிகம் பகிரப்பட்டு வருகின்றன. மேலும், சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கொடியைத் தனது கையில் வைத்து அசைத்த காட்சி ஒட்டுமொத்த ரசிகர்களாலும் பகிரப்பட்டு வருகிறது.

ஷாருக்கானின் கொல்கத்தா நைட் ரைடர்ஸ்



## தியாகி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயரில் முன்னர் இருந்த வீதிகளுக்கு மீண்டும் அவர்களது பெயர்கள் சூட்டப்பட வேண்டும். கிட்டு பூங்கா புனரமைக்கப்பட்டு மீண்டும் கிட்டு பூங்கா என பெயர் சூட்டப்பட வேண்டும்.

– இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்தேசியஅமைப்பாளரும் யாழ். மாநகரசபை உறுப்பினருமான விஸ்வலிங்கம் மணிவண்ணன்.

அரச இயந்திரத்துடன் சேர்ந்து இயங்கித் தமிழ் மக்களின் அழிவுக்குக் காரணமாகியவர்களுக்குச் சிலை வைக்க வேண்டும் என இங்குள்ள சிலர் கோருவது தேவையற்ற ஒரு விடயம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். மாநகரசபையின் கன்னி அமர்வு நேற்றுக் காலை யாழ். மாநகர சபா மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு தனது முதலாவது உரையை வழங்கியபோதே மணிவண்ணன் இவ்வாறு குறிப்பிட்டார்,

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

எங்களுக்கு வழிகாட்டிகளாய் இருந்த எங்கள் மாவீரச் செல்வங்களை முதலில் மனதிலே நிறுத்தி எனது உரையைத் தொடர்கின்றேன்.

எமக்கு மக்களால் வழங்கப்பட்டுள்ள ஆணை என்பது எமக்கான கௌரவம் அல்ல. அது எமக்கு வழங்கப்பட்ட சேவையாகவே நாங்கள் கருதுகின்றோம். எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற கடமையை நாங்கள் செவ்வனே மேற்கொள்வோம். நாங்கள் ஒரு கட்சியிலிருந்து இந்த மாநகரசபைக்குத்தெரிவுசெய்யப்பட்டிருந்தாலும், எங்களுக்கென்று சில கடமைகள் இருக்கின்றன. இந்தப் பிரதேச மக்களுடைய அபிவிருத்தியை நாங்கள் மனதிலே நிறுத்தி செயற்பட வேண்டும். அந்தக் கடமைப் பாட்டை நாங்கள் எங்களுடைய மனதிலே முன்னிறுத்தி பணியாற்ற வேண்டும்.

இங்குசிலஉறுப்பினர்களால் சில விடயங்கள் பற்றிப் பேசப்பட்டுள்ளன. பத்திரிகைகள் வாயிலாகவும் தியாக தீபம் திலீபன் அண்ணாவுக்குச் சிலை அமைப்பது தொடர்பாக அறிந்திருந்தோம். எங்களுடைய கட்சியின்நிலைப்பாடும் அதுவாகவே இருக்கின்றது. எமது முதலாவது செயற்பாடாக திலீபன் அண்ணாவுக்குச் சிலை அமைப்பதனை முன்னெடுக்கவே நாங்கள் விரும்புகின்றோம்.

நல்லூரின் வடக்கு வீதியிலே தியாக தீபம் திலீபன் அண்ணாவின் நினைவுக் கல் ஒன்று இருந்தது. அவ்விடத்திலேயே அவர் உண்ணாவிரதமிருந்தார். அந்த இடமும் புனரமைப்புச் செய்யப்படவேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம். அதேபோல பேரினவாதிகளால் அழிக்கப்பட்ட தியாகதீபம் திலீபனின் தூபியை அழிக்கப்பட்ட அடக்கு முறைக்கு நினைவுச் சின்னமாக வைத்துக்கொண்டு அதன் அருகில் புதிய தூபியை அமைத்தால் சிறப்பாக இருக்கும் என நினைக்கிறேன்.

அதேபோல உங்கள் எல்லோருக்கும் தெரியும் முத்திரைச் சந்தியிலே கிட்டுபூங்கா என ஒரு பூங்கா இருந்தது. அதனுடைய பெயரை சங்கிலியன் பூங்காஎன்றுமாற்றிவிட்டார்கள். அதனை மீண்டும் கிட்டு பூங்காவாக மாற்றுவதற்கு நாங்கள் சபையில் முன்மொழிவுகளைச் செய்யவேண்டும். இது சிதைவடைந்து ஒரு பற்றைக்காடாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அதனை மீண்டும் கிட்டு பூங்காவாக நாங்கள் மீள நிர்மாணிக்க வேண்டும். 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் அது எவ்வாறு கிட்டுப் பூங்காவாக இருந்ததோ அவ்வாறு அது மாற்றியமைக்கப்பட வேண்டும்.

விடுதலைப் போராட்டத்திலே பல்வேறு தியாகங்களைச் செய்தவர்களைக் கௌரவிக்கும் விதமாக யாழ். மாநகரசபைப் பகுதிக்குள்ளே உள்ள வீதிகளுக்கு மாவீரர்களின் பெயர்கள் முன்னர் சூட்டப்பட்டிருந்தன. சில வீதிகளுக்கு வேறு பெயர்கள் மாற்றப்பட்டுவிட்டன. அந்த வீரர்களைக் கௌரவிக்கும்வகையில் மீண்டும் அப்பெயர்கள் இடப்பட வேண்டும்.

இந்தச் சபையிலே ஒரு மாற்றம் தெரிந்தது. எல்லோரும் தேசியம் பேசுகிற ஒரு நிலைப்பாட்டினை எடுத்திருக்கின்றார்கள். அந்த வகையில் முன்னர் இருந்தவாறு மாவீரர்களது பெயர்களை வீதிகளுக்கு சூட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார்கள் என நினைக்கிறேன்.

இங்கு ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இங்கு நடைபெற்றது ஒரு விடுதலைக்கான போராட்டம். அடக்கப்பட்ட தமிழ் பேசுகின்ற மக்களுடைய விடுதலைக்காகவே இந்தப் போராட்டம் நடைபெற்றது. அந்த மக்களுடைய விடுதலைக்காகப் போராடிய போராளிகளும் இருக்கிறார்கள். நாம் யாருக்கு எதிராகப் போராடினோமோ, எங்கள் அடக்க நினைத்த அந்த அரச இயந்திரத்தோடு இணைந்து எமக்கு எதிராகப் போராடிய போராளிகளும் இருக்கிறார்கள். எம்மைப் பொறுத்தவரை விடுதலைக்காகப் போராடிய போராளிகளுக்கு மாத்திரமே சிலைவைக்க வேண்டுமேதவிர, விடுதலைக்கு எதிராகப் போராடிய அரச இயந்திரத்துடன் சேர்ந்து இயங்கி தமிழ் மக்களின் அழிவிற்குக் காரணமாகியவர்களுக்கு சிலை வைப்பது பொருத்தமற்ற ஒரு செயற்பாடாகவே இருக்கும்.

எமது கட்சி தேர்தல் பிரசாரங்களிலே பல விடயங்களைக் கூறியது. அதில் ஒன்று ஊழல். கடந்த காலங்களில் யாரும் ஊழல் செய்ததாக நாங்கள் இங்கு சொல்லவில்லை. ஊழல் செய்திருக்கக்கூடாது என்பது தான் எங்களுடைய விருப்பமாக இருக்கின்றது. மக்களுடைய வரிப்பணம் மக்களுக்குச் சென்றடையவேண்டும். மக்களுடைய வரிப்பணத்தை எவரும் பயன்படுத்தியிருந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் ஊழல்கள் இடம் பெற்றிருப்பின், அவற்றிற்கு நடவடிக்கை எடுக்கத் தவறுவோமாக இருந்தால் எதிர்காலத்தில் நாங்களும் ஊழல் செய்வதற்கு வழிவிட்டவர்களாக மாறுவோம். யாரும் ஊழல் செய்தார்கள் என்று நான் கூறவில்லை. யாரும் ஊழல் செய்திருந்தால் அது கண்டறியப்பட்டு அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

கடந்த நிர்வாகம் மட்டுமல்ல அதற்கு முன்னைய கால முறைகேடுகள் குறித்தும் ஓய்வுபெற்ற நீதிபதிகள் தலைமையில் விசாரணைகள் நடைபெற்றிருந்தன. அந்த அறிக்கைகள் இந்த அவைக்கு, கொண்டுவர வேண்டும். அந்த அறிக்கைகள் முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. யாழ். மாநகரசபை தொடர்பில் விசாரணை நடைபெற்றிருப்பதாயின், அதனை யாழ். மாநகரசபை அதனைக் கோரிப் பெறப்பட்டு குற்றவாளிகள் இருப்பின் அவர்கள் தண்டிக்கப்படவேண்டும்.

ஒற்றுமை என்ற விடயத்தில் பல்வேறு விடயங்களில் ஒற்றுமைகள் இருக்கின்றது. கொள்கைக்கான விடயம் எனும்போது இங்கு பலருக்கு அது சாத்தியமற்ற ஒன்று. இந்த உள்ளூராட்சிச்சபைகளை அமைப்பதில் பல கட்சிகள் ஒற்றுமையுடன் இணைந்திருந்தன. நாங்கள் மட்டும் உங்களது ஒற்றுமைக் கூட்டில் இணைந்திருக்கவில்லை. உங்களுக்கு எனது வாழ்த்துக்கள். உங்கள் ஒற்றுமையோடு தேசிய ரீதியான ஒற்றுமையாக எங்களை இழுத்துவிடாதீர்கள். நாங்கள் எமது தேசியம் சார்ந்த நிலைப்பாட்டிலிருந்து இந்த ஒற்றுமைக்குள் இணைந்துவிட முடியாது. எங்களுடைய கட்சியின் உருவாக்கமானது எங்களுடைய விடுதலைப் போராட்டம் எங்கு மௌனிக்கப்பட்டதோ அந்த இடத்திருந்து எமது உரிமைகளை முன்கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காகவே எமது கட்சி தொடங்கப்பட்டது. மக்கள் தங்கள் வாழ்வியலை சுயமாகக் கட்டியெழுப்பவேண்டும் என்பதற்காகவே நாங்கள் போராடுகின்றோம். அதற்கான அதிகாரம் எம்மிடம் வரவேண்டும் என்பதற்காகவே நாங்கள் போராடுகின்றோம். – என்றார்.

## பிரபாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநகர சபை உறுப்பினர் வேலும் மயிலும் குகேந்திரன் (ஜெகன்), அவ்வாறு சிலையை அமைக்க முடியுமா என்றும் கேள்வியெழுப்பினார்.

அனைவரும் ஒற்றுமையாக இணைந்து பயணிக்கவேண்டு மென்று கோரியுள்ள நிலையில் நாமும் இந்தச் சபையில் எதிர்க் கட்சியாக அல்லாமல் எதிர்க் கட்சியாகவே செயற்படுவோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். மாநகர சபையின் முதலாவது அமர்வு நேற்றுச் சபை மண்டபத்தில் முதல்வர் ஆர்னோல்ட் தலைமையில் இடம்பெற்றது. இந்த அமர்வில் கன்னி உரையாற்றுகையிலையே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பணத்தில் சிலைகள் வைக்கப்படவேண்டும் என இங்குள்ள பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கு நாம் ஆட்சேபனை தெரிவிக்க மாட்டோம். நீங்கள் யாருடைய சிலை என்றாலும் நிறுவலாம். அதற்கு நாம் பக்கபலமாக இருப்போம்.நாங்கள் இந்த சபையில் ஒரு கூட்டுக் குடும்பமாகச் செயற்படவேண்டும்.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடி விசாரணைக்கு நாம் பூரண ஒத்துழைப்புத்தருவோம். அதே போன்று தொடர்ந்து முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கும் எமது ஒத்துழைப்பையும் இந்தச் சபையில் வழங்குவோம்.

இங்கு ஒற்றுமை குறித்து பலராலும் பேசப்பட்டிருக்கின்றது. அந்த ஒற்றுமை என்பது மக்கள் நலன் சார்ந்த ஒற்றுமையாக இருக்க வேண்டும். அவ்வாறு மக்கள் நலன் சார்ந்து முன்னெடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு எமது ஆதரவும் பங்களிப்பும் நிச்சயம் இருக்கும். ஆகவே அவ்வாறு மக்களுக்காக சரியான முறையில் இந்தச் சபை தனது நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். – என்றார். (ஐ-7)

## நானாட்டானில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றியுள்ளது.

நானாட்டான் பிரதேச சபைக்கான தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவுகள் நேற்றுக் காலை பிரதேச சபை மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்றன.

தவிசாளர் பதவிக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் திருச்செல்வம் பரஞ்சோதி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் றோஜர் ஸ்ரலின் ஆகிய இருவரினதும் பெயர்களும் முன்மொழியப்பட்டன.

நானாட்டான் பிரதேச சபையின் 16 உறுப்பினர்களில் 10 உறுப்பினர்கள் இரகசிய வாக்களிப்புக்கு ஆதரவளித்தமையால் தவிசாளர் தெரிவு இரகசிய வாக்களிப்பு மூலம் இடம்பெற்றது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் திருச்செல்வம் பரஞ்சோதி 8 வாக்குகளையும், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் றோஜர் ஸ்ரலின் 8 வாக்குகளையும் பெற்று சமநிலையைப் பெற்றனர்.

இதனையடுத்து திருவுளச்சீட்டின் மூலம் தவிசாளர் தெரிவு நடைபெற்றது. இதன் போது நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் திருச்செல்வம் பரஞ்சோதி தெரிவு செய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து நானாட்டான் பிரதேச சபைக்கான உப தவிசாளர் தெரிவு இடம்பெற்றது.

உப தவிசாளர் தெரிவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் போ.லூர்துநாயகம்பிள்ளை மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ம.ஜெயானந்தன் குரூஸ் ஆகிய இருவரினது பெயர்களும் முன் மொழியப்பட்டன.

இதன்போது பகிரங்க வாக்கெடுப்புக்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவளித்த நிலையில், உப தவிசாளர் தெரிவு பகிரங்க வாக்களிப்பு மூலம் இடம்பெற்றது.

வாக்களிப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் போ.லூர்துநாயகம்பிள்ளை 8 வாக்குகளையும், ஐக்கியதேசியக்கட்சிஉறுப்பினர் ம.ஜெயானந்தன் குரூஸ் 8 வாக்குகளையும் பெற்று சம நிலையைப் பெற்றனர்.

இதனையடுத்து, திருவுளச்சீட்டின் மூலம் உபதவிசாளர் தெரிவு நடைபெற்றது. இதன் போது நானாட்டான் பிரதேச சபையின் உப தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் போ.லூர்துநாயகம்பிள்ளை தெரிவு செய்யப்பட்டார்.

நேற்றைய சபை அமர்வைப் பார்வையிட அமைச்சர் ரிஷாத் பதியுதீன், பிரதியமைச்சர் அமீர் அலி, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், கே.கே.மஸ்தான், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பிரிமூஸ் சிறாய்வா, அலிக்கான சரீப், எம்.கே. சிவாஜிலிங்கம், மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.எச்.முஜாஹிர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் உட்பட பலர் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ்ப்பாணத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது.

யாழ். குடாநாட்டுக்கு மாவா போதைப் பொருளை விநியோகிக்கும் பிரதான நபர் புத்தளத்தில் உள்ளார் எனவும், அவர் உட்பட மேலும் சிலரைக் கைது செய்யநடவடிக்கைமுன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மன்றுக்கு அறிவித்தனர்.

வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் பாலித பெர்னாண்டோவின் பணிப்புக் கமைய, யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் இயங்கிய மாவா போதைப் பொருள் விற்பனை நிலையம் சிறப்புப் பொலிஸ்குழுவால் முற்றுகையிடப்பட்டது.

அங்கு விற்பனைக்குத் தயாராக இருந்த பெருமளவு மாவாப் போதைப் பொருள் பொட்டலங்கள் மற்றும் அதற்கான மூலப்பொருள்கள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டன. அத்துடன், அந்த வியாபார நிலையத்தில் கடமையாற்றிய குற்றச்சாட்டில் 3 பேரும் மாவா போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 4 பேரும் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில், சந்தேகநபர்கள் 7 பேருக்கும் எதிராக தனித்தனியே முதல் அறிக்கை முன்வைத்து பொலிஸார் முற்படுத்தினர்.

இந்தப் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கை மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரின் பணிப்பின் கீழ் முன்னெடுக்கப் பட்டது. மாவா போதைப் பொருள் விற்பனை வலையமைப்பை யாழ்ப்பாணக் குடா நாட்டில் முற்றாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வியாபாரத்தில் ஈடுபடும் புத்தளத்தில் வசிக்கும் முக்கிய சூத்திரதாரி உள்ளிட்ட மேலும் சிலர் கைது செய்யப்பட வுள்ளனர். எனவே, இந்தச் சந்தேக நபர்கள் 7 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மன்றிடம் கோருகின்றோம் என்றுபொலிஸார்விண்ணப்பம் செய்தனர்.

முதல் அறிக்கையை ஆராய்ந்த நீதிவான், சந்தேக நபர்கள் 7 பேரையும் வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.(ஐ)

## கூட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு அரசியலில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்றுக் கடைசி நேரத்தில் பிற்போடப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்த கூட்டு அரசில் தொடர்ந்து நீடிப்பதா அல்லது விலகிக் கொள்வதா என்பது தொடர்பில் நேற்றைய மத்திய குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நேற்று முன்தினம் கூறியிருந்தது. ஆயினும், அந்தக் கூட்டம் நேற்றுப் பிற்போடப்பட்டது.

தேசிய அரசைத் தொடர்வதற்கு ஜனாதிபதி முடிவெடுத்துள்ளார் என்றும், அதன் அடிப்படையிலேயே சு.க. மத்திய குழுக் கூட்டம் பிற்போடப்பட்டது என்றும் நேற்றிரவு தகவல்கள் வெளியாகின.

ஆனாலும், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளித்த சு.கவின் 16 எம்.பிக்களும் கூட்டு அரசில் இருந்து வெளியேறுவர் எனவும், அவர்கள் வெளியில் இருந்து ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பர்என்றும்தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# அரசியல் கைதிகளாக செயற்பட வேண்டிய நிலையில் கல்வி அதிகாரிகள்





மட்டக்களப்பு மத்திய கல்வி அதிகாரிகள் அரசியல் கைதிகளாக இருந்து செயற்பட வேண்டிய ஒரு காலகட்டத்திற்குள் தள்ளப்பட்டுள்ளனர் எனப் பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பாடசாலை ஒன்றில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

மட்டக்களப்பு மத்திய கல்வி வலயம் தேசியத்தில் சாதாரண தரப் பரீட்சையில் மூன்று தடவைகள் முதன்மை பெற்று வந்தது.

இதற்குக் காரணம் அந்தக் காலத்தில் இருந்த கல்வியியலாளர்களின் கடின உழைப்பும், வழிகாட்டலுமே.

ஆனால், காலப்போக்கில் கல்வி அதிகாரிகளுடைய நிலவரம் அரசியல் கைதிகளாக இருந்து செயற்பட வேண்டிய காலகட்டத்திற்குள் தள்ளப்பட்டுள்ளது. இதனால் கல்வி நிலை பின் தள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

## ஹபரணையில் விபத்து 16 பேர் படுகாயம்!

ஹபரணை, மொரகஸ்வேவ பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் 16 பேர் படுகாயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்தவர்களுள் 8 பெண்களும் உள்ளடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

படுகாயமடைந்த அனைவரும் ஹபரணை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலனறுவையில் இருந்து கல்முனை நோக்கி பயணித்த பஸ் ஒன்று பாதையை விட்டு விலகி இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

சாரதியின் நித்திரை காரணமாகவே இந்த விபத்து சம்பவித்துள்ளது என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபரணை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இருவேறு தாக்குதல் சம்பவத்தில் இருவர் பலி

கொழும்பு, ஏப். 12

நிட்டம்புவ, எல்லக்கல பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தனிப்பட்ட பிரச்சினை காரணமாகவே இந்தக் கொலை நடந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த நபரை வதுபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே அவர் உயிரிழந்துள்ளார்.

பனாவல, தும்மலகொட பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் 21 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை அத்தனகல்ல நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட உள்ளதுடன் நிட்டம்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன், வலப்பனை, திம்புட்டுகொட பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நேற்று முன்தினம் மாலை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வடபே, திம்புட்டுகொட பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபரைக் கைதுசெய்ய வலப்பனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(க)

## நீதிமன்றப் பதிவாளர்கள் மூவர் வடக்கில் நியமனம்

யாழ்ப்பாணம், ஏப்.12

வடக்கு மாகாணத்தில் நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர்கள் மூவர், நீதிமன்றப் பதிவாளர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர். அவர்களுக்கான நியமனம் எதிர்வரும் 23ஆம் திகதி நடைமுறைக்கு வரும் என நீதிச் சேவைகள் ஆணைக் குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் சேவை மூப்பிலுள்ளவர்களுக்கு போட்டிப் பரீட்சை மூலம் நீதிமன்றப் பதிவாளர் சேவை தரம் 3இற்கு நீதிச் சேவைகள் ஆணைக் குழுவால் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அதில் வடக்கு மாகாணத்தில் மூவருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் கந்தசாமி நவநீதன் (சட்டத்தரணி) யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றப் பதிவாளராகவும், வவுனியா மாவட்ட நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் கந்தசாமி கஜரூபன் மல்லாகம் மாவட்ட நீதிமன்றப் பதிவாளராகவும், ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர் இரட்ணசபாபதி குகதாஸன் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றப் பதிவாளராகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

(ஐ)

## தெஹிவளை மிருகக்காட்சி சாலை 3 இரவுகளுக்கு மூடப்படும்

கொழும்பு, ஏப். 12

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தெஹிவளை தேசிய மிருகக்காட்சி சாலையானது 3 நாள்களுக்கு இரவு நேரங்களில் மூடப்படுமென, தேசிய மிருகக்காட்சி சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 13, 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் இரவு நேரங்களில் மிருகக்காட்சி சாலை மூடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இந்த 3 தினங்களும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை இதனைப் பார்வையிட முடியுமெனவும் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.



# சட்டவிரோத மீன்பிடியைத் தடுக்க அதிகாரத்தைப் பயன்படுத்துங்கள்

## முல்லை மாவட்ட செயலரிடம் கோரிக்கை



(எஸ்.நிதர்ஷன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் மீனவர்களின் பாரம்பரிய தொழில் இடங்களில் சிங்கள மீனவர்கள் அடாத்தாகத் தங்கியிருக்கின்றனர். அவர்கள் சட்டத்துக்கு மாறான தொழில்களையும் செய்து வருகின்றார்கள். இவற்றைக் கட்டுப்படுத்த மாவட்ட செயலர், தனக்குள்ள அதிகாரத்தை சரியாகப் பயன்படுத்தவேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்காகச் சென்ற வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மாவட்ட செயலரிடம் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கான மகஜரைக் கையளித்தனர்.

இதன்போதே அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

இந்த விடயம் தொடர்பாக மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் கருத்து தெரிவிக்கையில் –

நாயாறுப் பகுதிக்குச் சென்றிருந்தபோது அங்கே சிங்கள இனத்தவர் ஒருவர் தனியாக 40 படகுகளை வைத்துத் தமிழ் மக்களுக்குச் சொந்தமான இடத்தில் தொழில் செய்து வருகின்றார் என்பதை அறிந்து கொண்டோம். அதனைக் கட்டுப்படுத்த மாவட்ட செயலரின் கீழ் உள்ள கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களம் மற்றும் பொலிஸ் ஆகியவற்றைப் பயன்படுத்தி மாவட்ட செயலராகிய நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்கலாம். எடுத்திருக்க வேண்டும்.

ஆனால் அவ்வாறான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படாத நிலையில் அந்தச் சிங்களவர் தான் நினைத்தது போல் தொடர்ந்தும் தொழில் செய்து வருகின்றார். எனவே இவ்வாறான சில விடயங்களை மாவட்ட செயலர் கவனத்தில் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து மாகாணசபை உறுப்பினர் க.சிவநேசன் கருத்துத் தெரிவிக்கையில் –

கொக்கிளாய் இறங்குதுறைக்குச் சென்றிருந்தபோது அங்கே எந்தச் சலனமும் இல்லாமல் சிங்கள மீனவர்கள் உழவு இயந்திரங்களைப் பயன்படுத்தித் தொடர்ச்சியாகக் கரைவலை இழுத்துக் கொண்டிருக்கின்றார்கள். சட்டத்திற்கு மாறான தொழில்களை அவர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். இது தொடர்பாக மாவட்ட செயலர் உடனடி நடவடிக்கையில் இறங்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

(ஐ-7)










இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.04.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.